பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 தை 28 புதன்கிழமை 10.02.2021 கதிர் 97

### இது ரகசியம் அல்ல!

கொவிட் – 19 தொடர்பான தகவல் ஒன்று இது. புதுக்குடியிருப்பில் நடந்ததாகத் தெரிகின்றது.

அங்கு 88 வயது வயோதிபர் ஒருவர் இயற்கைமரணமடைந்தார். நூற்றியைம்பது பேருடன் சாவு வீட்டை நடத்துவதற்கு பிரதேச சுகாதாரப்

2

# சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட எஸ்.ரி.எவ். நீக்கப்படுவதற்கு நானேதான் காரணம்



## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இறுமாப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பை நானே நீக்கினேன்.

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.


பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான தமிழ்பேசும் சமூகத்தின் நீதிக்கான பேரணி பல்வேறு தடைகளைத் தாண்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை பொலிகண்டியில் வெற்றியுடன் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியின் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் த.கலையரசன் உள்ளிட்ட

2

# என் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் இலங்கை அரசே முழுப் பொறுப்பு

## நாடாளுமன்றில் சுமந்திரன் எம்.பி. இடித்துரைப்பு



**எனது உயிருக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்க வேண்டும்.**

**- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் இடித்துரைத்தார்.**

**எனக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கப்பட்டதன் ஊடாக எனக்கு எதிரானவர்கள் செயற்படலாம் என்ற சமிக்ஞையை அரசு வெளிப்படுத்தியுள்ளதா? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.**

2

## ஹக்கீம்,ரிஷாத் பாக். தூதருடன் தனித் தனிப் பேச்சு

கொழும்பு, ஜன. 10

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வரும் 22 ஆம் திகதி இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், நேற்று பாகிஸ்தான் நாட்டின் இலங்கைக்கான பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் பெட்டியை கொழும்பிலுள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீனும் நேற்று பாகிஸ்தான் பிரதித் தூவரைச் சந்தித்தார்.

# வருடாந்தம் 69 ஆயிரம் ரூபாவை இழப்பர் தோட்டத் தொழிலாளர்!

## அரசின் சூழ்ச்சித் திட்டம்; சஜித் அம்பலம்



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதத்தில் 13 நாள்களே வேலை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. இதனால் வருட வருமானத்தில் 69 ஆயிரம் ரூபாவை இழக்க வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது.

2

# யாழில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட கலாசார மண்டபம் படைத் தரப்பின் கைக்கு!

## கொழும்பிலிருந்து வந்தது பணிப்புரை

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம்,பெப்.10

யாழ்ப்பாணத்தில் இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள கலாச்சார மண்டபத்தினை நிர்வகித்துப்பாதுகாப்பதற்கு கொழும்பு தாமரைத் தடாகத்தை நிர்வகிக்கும் சிரேஷ்ட

11

# தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் மாணவி

## வவுனியாவில் நேற்று சம்பவம்

வவுனியா, ஜன. 10

வவுனியா, கற்குழி பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் பாடசாலை மாணவி சடலமாக மீட்கப்பட்டார்.

2

# வேலை நாள்களில் கைவைத்தால் தக்க பதிலடி வழங்கும் இ.தொ.கா.

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் பகிரங்க எச்சரிக்கை

வேலை நாள்களை குறைக்கக் கம்பனிகள் நடவடிக்கை எடுத்தால் விளைவுகள் பாரதூரமாக இருக்கும்.

– இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க

2





## ஆறு பேருக்கு நேற்று வடக்கில் தொற்றுறுதி!

யாழ். ஆய்வுகூடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆறு பேர் உள்ளிட்ட 14

2

## வடக்குக் கிழக்குப் போராட்டத்தை கொழும்பு ஊடகங்கள் இருட்டடிப்பு

### ஏன் என அமெரிக்கத் தூதுவர் ஆச்சரியம்



கொழும்பு,பெப்.10

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி' குறித்து கொழும்பைத் தளமாகக் கொண்ட

2

# நேற்று மாத்திரம் 976 பேருக்கு கொரோனா ஒரே நாளில் அதிகளவான தொற்றாளர்கள்

## 71 ஆயிரத்தைத் தாண்டியது மொத்தப் பாதிப்பு

இலங்கையில் ஒரே நாளில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் நேற்றே அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் 976 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி

2

காலைக்கதிர்
Kalaikkathir



## போர்க்குற்றங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினர் அனுமதித்தனர்.

இறந்தவரின் ஒரு மகள் அப்பிரதேச பாடசாலை ஒன்றின் ஆசிரியர். அப்பாடசாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள். பக்கத்துப் பாடசாலையிலும் நானூறு மாணவர்கள்.

மேற்படி இரு பாடசாலைகளையும் சேர்ந்த பல நூறு மாணவர்கள் சாவு வீட்டுக்கு வருகை தந்தனர். சக ஆசிரிய குழாமின் ஏற்பாடு என்று பேசிக் கொண்டனர்.

உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் சுகாதாரப் பிரிவில் உயர் பதவியில் இருப்பவர். சாவு வீட்டுக்குப் புறப்பட்டு வந்தவர், இப்படி சாவு வீட்டில் பல நூறு பேர் மொய்த்துக் கொண்டிருக்கின்றனர் என்ற தகவல் கிடைத்ததும் விசனித்துக் கொண்டு, நமக்கேன் சிக்கல் என்று சாவு வீட்டுக்குப் போகமலேயே இடைவழியில் திரும்பி விட்டாராம்.

நாமாக நம்மை வழிப்படுத்திக் கொள்ளாவிட்டால் கொரோன வைரஸ் நம்மை ஒரு வழிப்படுத்தாமல் விடாது. அதுவும் சமூகத்தை வழிப்படுத்தி, நெறிப்படுத்துவதில் ஆசிரிய சமூகத்துக்கு பெரும் கடப்பாடு உண்டு என நான் நினைக்கிறேன்.

* * *

நேற்றைய எனது பத்தியில் தற்போதைய மட்டக்களப்பு மாவட்ட தமிழரசு எம்.பியான சாணக்கியனின் பேரனார் சீ.மூ.இராசமாணிக்கத்தை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகராக நான் குறிப்பிட்டமை குறித்து கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

1947 நாடாளுமன்றத் தேர்தலில் பட்டிருப்புத் தொகுதியில் சுயேச்சையாக போட்டியிட்ட அவர் எதிர்மன்னசிங்கத்திடம் 800 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார். ஆனாலும் 1952 பொதுத் தேர்தல் சுயேச்சையாகப் போட்டியிட்டு 460 வாக்குகள் வித்தியாசத்தில் அவர் வென்றார்.

1948 தமிழரசு தொடங்கியபோது அவர் அக்கட்சியில் இருக்கவில்லை. 1952 இல் சுயேச்சையாக எம்.பியான பின்னரே தமிழரசுடன் அவர் நெருங்கினார். 1956 தேர்தலில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்டு அதே எதிர்மன்னசிங்கத்திடம் 500 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றார். ஆனாலும் 1960 மார்ச், 1960 ஜூலை, 1965 தேர்தல்களில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்டு பட்டிருப்பு எம்.பி. பதவியைத் தக்கவைத்துக் கொண்டார். எனினும் 1970இல் ஐ.தே.க. வேட்பாளர் தம்பிராஜாவிடம் 600 வாக்குகளால் தோற்ற அவர் 1974இல் தமது 61 ஆவது வயதில் காலமானார்.

கிழக்கில் இலங்கைத் தமிழரசை நிலை நிறுத்துவதில் தந்தை செல்வநாயகத்தின் வலது கையாகத் திகழ்ந்தார் என்ற அர்த்தத்திலேயே அவரைத் தமிழரசு ஸ்தாபகர் எனக் குறிப்பிட்டு விட்டேன். என் பதிவு தவறு எனச் சுட்டிக் காட்டப்பட்டமையால் அதை திருத்திப் பதிவிடுகிறேன்.

* * *

வெறும் அரசியல் தகவல்களை மட்டும் நான் குறிப்பிட்டுக் கொண்டிருந்தால் உங்களுக்கு 'போர' அடித்து விடும் அல்லவா? சில குசும்புத்தனங்களை – குழப்பங்கள் – நாங்கள் பண்ணினால்தானே எங்கள் பத்தியையும் நீங்கள் தவறாமல் வாசிப்பீர்கள்...! அந்த வகையறாவில் மீண்டும் ஓர் அரசியல் குழப்பத்துக்கு – இழுபறிக்கு – பிள்ளையார் சுழி போடுவதன் மூலம் நமது தமிழ் அர சியல் களத்தை திரும்பவும் ஒரு தடவை சூடு பறக்க வைக்கலாம் என்பது என் நப்பாசை. அதனால் இந்தக் குறிப்பு.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் தேர்தல் முடிந்ததும் தமிழ்க் கூட்டமைப்புக்குள் ஒரு குழப்பம் சூடு பிடித்தது வாசகர்களுக்கு நன்கு நினைவிருக்கும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர், பேச்சாளர், கொறடா பதவிகளைப் பிடிக்கின்றோம் என்று ஒரு குழு புறப்பட்டது. அத் தரப்பின் பிரதான இலக்கு சுமந்திரன்தான். அவரைக் கூட்டமைப்புப் பேச்சாளர் பதவியில் இருந்து தூக்கிக் கடாசுவதுதான் திட்டம். ஆனால் இப்போது தேர்தல் முடிந்து ஆறு மாதங்களாகி விட்டன. நிஜ நிலைமை – யதார்த்தம் – என்ன?

வயோதிபம் காரணமாக திருகோணமலையில் அதிகம் முடங்கி விட்டார் இரா. சம்பந்தன் எம்.பி.

பல சமயங்களில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் சார்பில் பதிலீடாக அக்கடமையைக் கொழும்பில் சுமந்திரன்தான் நிறைவேற்றுகின்றார்.

நாடாளுமன்றக் குழுவின் பேச்சாளர் பதவி தொடர்ந்தும் சுமந்திரனிடம்தான்.

கட்சி கொறடா பதவியிலிருந்த சிறிதரன் எம்.பியையும் சித்தார்த்தன் எம்.பி. போன்றோர் தாறுமாறாக விமர்சித்து இராஜினாமாச் செய்ய வைத்துவிட்டனர். அதனால் இப்போது கொறடாப் பதவியையும் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக சுமந்திரனே வகித்து வருகின்றார்.

'சும்மாகிடந்தசங்கைஊதிக்கெடுத்தானாம் ஆண்டி' என்ற மாதிரி சுமந்திரனை விழுத்துகின்றோம் என்று புறப்பட்ட சில பிரகிருதிகள் கடைசியில் மூன்று பதவியையும் சுமந்திரனிடம் ஒப்புவித்து விட்டு அடங்கி விட்ட நிலைமைதான்.

சரியா வாசகர்களே ...? என் நாரதர் பணியை கனகச்சிதமாக வத்தி வைத்து ஆரம்பித்து வைத்திருக்கிறேன் என்று இப்போதாவது ஒப்புக் கொள்கின்றீர்களா...?

– மின்னல் –

## சுமந்திரனுக்கு வழங்கப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பிரதிநிதிகள் பலர் முன்னின்று செயற்பட்டனர். இவர்களில் சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படை கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு திடீரென மீளப்பெறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், 'ஹிரு' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட எஸ்.டி.எவ். பாதுகாப்பை தானே நீக்கினார் எனவும், எதற்காக நீக்கப்பட்டது என்ற காரணத்தையும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்த பின்னணியிலேயே அவருக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டிருந்த நிலையில் அவருக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு அவசியமற்றுப் போய்விட்டது. பெரியளவிலான பொது நிகழ்வில் எவ்வித உயிர் அச்சுறுத்தலுமின்றி அவரால் பங்கேற்க முடியுமாயின், அதன் பின்னர் இவ்வாறான விசேட பாதுகாப்பு அவசியமற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் பாதுகாப்பு அவருக்குத் தொடரும் – என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

## என் உயிருக்கு ஆபத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பத்து முக்கியமான, நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான கவனவீர்ப்புப் போராட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து ஜனநாயக ரீதியில் போராடுவதற்கு எமக்கு உரிமையுள்ளது. இந்தப் போராட்டம் தமிழ்பேசும் மக்களின் ஆதரவுடன் வெற்றி பெற்றுள்ளது. இதற்கு அரசு பதிலளிக்கும் எனநாம் நம்புகின்றோம்.

இந்தப் போராட்டம் பொலிகண்டியில் நிறைவுற்ற மறுகணமே எனக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படை பாதுகாப்பு நீக்கப்பட்டது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் எனக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது என நான் எங்கும் முறையிடாத போதும் அரசே எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது எனத் தெரிவித்தது. கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குப் பதியப்பட்டு நால்வர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான எனது பாதுகாப்பு அச்சுறுத்தல் சம்பந்தப்பட்ட ஏராளமான வழக்குகள் தொடர்பான ஆவணங்கள் என்னிடமுள்ளன.

மேலும், என்னைக் கொலைசெய்ய முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் தெற்கின் சிங்களப் பாதாளக் குழுக்களின் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 30 பேரைக் கைதுசெய்து தடுப்பில் வைக்கும் வரை இவை தொடர்பாக நான் எதனையும் அறிந்திருக்கவில்லை.

எனவே, எனக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கின்றது என எனக்குத் தெரிவிக்காது அல்லது நான் முறையிடாதபோது அரசு அநேகமானோரைத் தடுப்பில் வைக்குமானால் எனக்கு வழங்கிய விசேட அதிரடிப் படைப் பாதுகாப்பைத் தற்போது மீளப்பெறுவதேன்?

ஒருவேளை இந்த விடயங்கள் உண்மையாக இருந்தபோதும் நான் பேரணியில் பங்குபற்றியதன் விளைவாக அரசு என் மீது எரிச்சல் அடைந்திருக்கலாம் அல்லது கூறப்பட்ட பாதுகாப்பு அச்சுறுத்தல் தொடர்பான விடயங்கள் பொய்யாகவும், அரசு அப்பாவி இளைஞர்களைத் தடுப்பில் வைத்திருப்பதாகவும் இருக்கலாம் அல்லது எனது பாதுகாப்பை அகற்றுவதன் மூலம் எனக்கு தீங்கு விளைவிக்கக் காத்திருப் போருக்கு அரசு சமிக்ஞை காட்டி இருக்கலாம். எனவே, எனது உயிருக்கு யாதாயினும் பாதகம் ஏற்படுமாயின் அரசே அதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் – என்றார்.

## வருடாந்தம் 69 ஆயிரம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என்ற உறுதிமொழி ஜனாதிபதியால் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், சம்பள நிர்ணய சபை ஊடாக தற்போது அடிப்படை சம்பளமாக 900 ரூபாவும், வாழ்வாதாரக் கொடுப்பனவாக 100 ரூபாவும் வழங்கப்படவுள்ளது. இது பெரும் வெற்றி என ஆளுங்கட்சியில் இருப்பவர்கள் மார்தட்டுகின்றனர்.

இதற்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 750 ரூபா வழங்கப்பட்டது. கூட்டு ஒப்பந்தத்தில் ஊடாக வருடம் 300 நாள்கள் வேலை வழங்கப்படவேண்டும் என்ற ஏற்பாடு இருந்தது. இதன்மூலம் வருடாந்தம் 2 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவைத் தோட்டத் தொழிலாளர்கள் உழைத்தனர்.

ஆனால், தற்போது 13 நாள்களே வேலை வழங்கப்படவுள்ளது. வருடத்தில் 156 நாள்கள். அப்படியானால் வருடம் ஒரு இலட்சத்து 56 ஆயிரம் ரூபாவையே அவர்களால் உழைக்க முடியும். இதன்படி 69 ஆயிரம் ரூபாவை அவர்கள் இழக்கின்றனர்.

அதுமட்டுமல்ல கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக தொழிலாளர்களுக்கு 28 சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. அவையும் தற்போது இல்லாமல் போகப்போகின்றன. ஆயிரம் ரூபா நாட் சம்பளம் வழங்குவது நல்லது. அதேபோல் கூட்டு ஒப்பந்தத்தின் ஊடாக தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட வேண்டும் – என்றார்.

## வேலை நாள்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான ஜீவன் தொண்டமான் எச்சரிக்கை விடுத்தார்.

சௌமியபவனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபா சம்பள உயர்வு தொடர்பான பேச்சு நேற்று (நேற்றுமுன்தினம்) சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்றது. இதில் ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கும் யோசனையும் நிறைவேற்றப்பட்டது.

வேலை நாட்கள் குறைக்கப்படும் எனச் சிலர் கூறுகின்றனர். அவ்வாறு நடக்காது. நடக்கவும் விடமாட்டோம். கம்பனிகள் வேலை நாள்களைக் குறைத்தால் விளைவுகள் பாரதூரமாக அமையும். தக்க பதிலடி கொடுப்பதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தயாராகவே இருக்கின்றது – என்றார்.

## ஆறு பேருக்கு நேற்று .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை தரப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பவற்றில் 765 பேருக்கு கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதில் கிளிநொச்சி மாவட்டத்தில் மூவருக்கும், வவுனியா மாவட்டத்தில் மூவருக்கும் என வட மாகாணத்தைச் சேர்ந்த ஆறு பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் தொற்று உறுதியானவர்களில் கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் இருவர் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர தனிமைப்படுத்தல் நிலையங்களைச் சேர்ந்த எட்டுப் பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் மையத்தில் ஒருவருக்கும் மற்றும் முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்தில் 07 பேருக்கும் இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்குக் கிழக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகங்கள் கவனம் செலுத்தாதமை ஆச்சரியமளிப்பதாக இலங்கைக்கான அமெரிக்க துதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டங்கள் குறித்து தமிழ் ஊடகங்களில் வெளிவந்த செய்திகளைப் பார்த்தேன். ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் இது குறித்து கவனம் செலுத்தவில்லை.

அமைதிவழிப் போராட்டம் என்பது அடிப்படை ஜனநாயக உரிமைகளில் ஒன்றாகும். இவ்வாறான அமைதிவழிப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். அவர்களின் கவலைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும். – எனவும் தனது ருவிட்டரில் இன்று அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

## நேற்று மாத்திரம் 976 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளது என அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானோரின் மொத்த எண்ணிக்கை 71 ஆயிரத்து 211 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் கடந்த வாரங்களில் 800 முதல் 850 வரையான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையுடன் பின்னர் அந்த எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டது.

இந்தநிலையில், மீண்டும் நாளாந்த தொற்றாளர்கள் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருந்தவர்களில் 912 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை 65 ஆயிரத்து 53 பேர் குணமடைந்துள்ளமையுடன், 5 ஆயிரத்து 788 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

## தூக்கில் தொங்கிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று வீட்டில் எவருமற்ற நிலையில் அவரது தங்கையுடன் குறித்த மாணவி இருந்துள்ளார். இந்தநிலையில், அவர் தூக்கில் தொங்கியிருப்பதை அவதானித்த அவரது தங்கை அயலவர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு ச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்ததுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

# சுமந்திரன், சாணக்கியன் இல்லாவிட்டால் போராட்டம் பொத்துவிலில் முடிந்திருக்கும்!

## பொத்துவில் – பொலிகண்டிப் பேரெழுச்சி தனிப்பட்டவர்களின் வெற்றி அல்ல!

## தமிழினத்தின் வெற்றி என்கிறார் சிவாஜி



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரெழுச்சியின் வெற்றி, தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல எனவும், எல்லோரும் இணைந்த இனத்தின் வெற்றி என்றும் வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் அரசாங்கத்தின் அடக்குமுறைக்கு மத்தியில் பல்லாயிரக்கணக்கில் திரண்ட மக்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தப் பேரணியில் முக்கியமான விடயம் வெளியிலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரை முன்னால் நிறுத்திவிட்டு பின்னாலிருந்து உத்தரவுகள் வழங்கப்பட்டன. சாமியாரில் பிழை இல்லை.

இதில், அரசியல்வாதிகள் வேண்டாம் என்பது போன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. மூன்றாம் திகதி பொத்துவிலில் பேரணி ஆரம்பமானபோது நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கு செல்லாமல் விட்டிருந்தால் அந்தப் பேரணி பொத்துவிலோடு முடிந்திருக்கும்.

அங்கு போன நாடாளுமன்ற உறுப்பினர்களைக் குறை சொல்வது சரியல்ல. அதிலே, மிக முக்கியமாக முன்னணியில் சுமந்திரனும் சாணக்கியனும் இருந்திருக்கிறார்கள். அவர்களின் பங்களிப்பைப் புறக்கணிக்க முடியாது.

அவர்களுடன் ஆயிரம் கருத்து வேறுபாடு இருக்கலாம். விமர்சனங்கள் இருக்கலாம். எல்லோரும் சேர்ந்து இதைச் சாதித்தோம் என்பதைப் புரிந்துகொள் ளாமல் கருத்துத் தெரிவிப்பது சரியல்ல.

சில கருத்து வேறுபாடுகள் இருந்தால் அதைப் பேசலாம். தீர்த்துக் கொள்ளலாம். அதை விடுத்து திருகோணமலை சிவன் கோயிலுக்கு முன்னால் வைத்து கிறிஸ்தவ பாதிரியார் ஒருவர், இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக நடந்து கொண்டார்கள் என அறிவிக்கின்றார்.

எங்கள் வீட்டுப் பிரச்சினையைக்கூட பொதுவெளியில் பேசவேண்டிய அவசியமில்லை. அதன் எதிரொலியாக திருகோணமலையிலிருந்து பேரணியில் சுமந்திரன் கலந்து கொள்ளவில்லை. அவருக்கு வேறு தனிப்பட்ட காரணங்களும் இருந்திருக்கலாம்.

முன்னுக்கு நாங்கள் தான் வர வேண்டும் என சாமியாரை வேள்விக்குக் கொண்டு செல்வதைப் போல வளையம் பிடித்துக்கொண்டு கொண்டு சென்றார்கள். இதெல்லாம் தேவையில்லை. அவர்கள் தலைமை தாங்கி முன் செல்லலாம் என்று எங்களுக்கும் உடன்பாடு இருந்தது. முதலில் மதத்தலைவர்கள், பின்னால் பல்கலைக்கழக மாணவர்கள், அதன்பின்னால் சிவில் சமூகத்தினர், அதையடுத்து அரசியல்வாதிகள் எனக் கூறினார்கள்.

நான் ஒன்றைத் தெளிவாகக் கூறுகிறேன். அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லாமலிருந்தால் இந்த வெற்றியை அடைந்திருக்க முடியாது. இது தனிப்பட்டவர்களின் வெற்றியல்ல. எல்லோரும் இணைந்த இனத்தின் வெற்றி. இதைப் புரிந்து கொள்ளாமல் அவர் வேண்டாம், இவர் வேண்டாம் எனச் சொல்ல முடியாது. தனிப்பட்ட கட்சிப் பிரச்சினைகளை வேறு இடங்களில் வைத்துக் கொள்ளுங்கள்!

இதேவேளை, சிலர் நினைக்கிறார்கள் கல் வைத்த இடம் ஊறணியென, வல்வெட்டித்துறையென. அது தவறானது. அதுவும் பொலிகண்டிதான். பொலிகண்டி செம்மீன் படிப்பகத்தில்தான் கல் நாட்டப்பட்டது. அடிக்கல் நாட்டுவதெல்லாம் திட்டத்தில் இருக்கவில்லை. திடீரென செய்யப்பட்ட ஏற்பாடு.

ஆனால், சுமந்திரனும், சாணக்கியனும் அதில் போராட்டத்தை முடித்து வைப்பதை போல நடந்து கொண்ட விதம் பிழையானது. பொலிகண்டி ஆலடியில் மக்கள் வற்புறுத்தியிருக்கலாம். ஆனால், தலைவர்கள் தலைமை தாங்கிச் சரியான வழிகாட்ட வேண்டும். ஆனால், அப்பொழுது தலைமைத்துவம் இல்லாமல் போய்விட்டது.

நான் திக்கம் சந்திக்குப் போய்க்கொண்டிருந்த போது, சுமந்திரனும் சாணக்கியனும் நிகழ்ச்சியை முடித்து விட்டனர் எனச் செய்தி வந்தது. பின்னர் சாமியார் அங்கு வந்து பிரகடனம் வாசித்து முடித்து வைக்கப்பட்டது.– என்று குறிப்பிட்டுள்ளார்.

# ஒரு நாடு – ஒரு சட்டம் என்று கூறும் அரசு முஸ்லிம்களுக்கு ஏன் தனி திருமணச் சட்டம்?

## ரத்தன தேரர் சபையில் கேள்வி



ஒரு நாடு – ஒரு சட்டம் என்ற கொள்கையில் பயணிக்கும் இலங்கையில், காதி நீதிமன்றங்கள் தொடர்பாக அரசாங்கம் சிந்திக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

ஒரு நாடு ஒரு சட்டம் என்பதுதான், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான கொள்கையாகக் காணப்படுகிறது.

அரசமைப்பிலும் ஒரு நாட்டில் ஒரு சட்டம் என்றுதான் கூறப்படுகிறது. இந்த நிலையில், இலங்கையில் முஸ்லிம்களுக்கு என்று ஒரு திருமணச் சட்டம் காணப்படுகிறது.

இந்தச் சட்டம் நபிகள் நாயகத்தால், கிறிஸ்துவுக்கு முன்பு வகுக்கப்பட்டதாக அல்– குர் ஆனில் கூறப்பட்டுள்ளது.

பெரும்பாலான இஸ்லாமிய நாடுகளிலேயே இந்தச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில், இலங்கையில் இது நடைமுறையில் காணப்படுகிறது.

இதுதொடர்பாக அமைச்சரும் அறிந்திருப்பார் என்று கருதுகிறோம். அத்தோடு, முஸ்லிம் மக்களுக்கு என இந்த நாட்டில் காதி நீதிமன்றங்களும் காணப்படுகின்றன.

இந்த நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளின் சம்பளம் உள்ளிட்ட அனைத்தும் எமது நாட்டின் நீதி அமைச்சின் ஊடாகத்தான் வழங்கப்படுகின்றன.

முஸ்லிம்கள் வேறு மதத்தைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்தால் , அவரை கட்டாயமாக முஸ்லிமாக மாற்ற வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

விவாகரத்து செய்வதாக இருந்தாலும், சாதாரண நீதிமன்றங்களில் மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.

இது அசாதாரண விடயமாகும். நாட்டு மக்கள் ஒரு நாட்டில் இரண்டு சட்டங்கள் இருக்க வேண்டும் என்று இந்த அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை. இதனை அரசாங்கம் உணர்ந்துகொள்ள வேண்டும்.– என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொரோனாவிலிருந்து 912 பேர் குணமடைவு!

நாட்டில் கொரோனாத் தொற்றில் இருந்து மேலும் 912 பேர் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதனை அடுத்து நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 65 ஆயிரத்து 53 ஆக அதிகரித்துள்ளது.

நாட்டில் இதுவரை கொரோனாத் தொற்று உறுதியானோரின் மொத்த எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆகக் காணப்படுகின்றது.

இதில் 4 ஆயிரத்து 817 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரும் அதேவேளை 711 பேர் கொரோனா தொற்று சந்தேகத்தில் மருத்துவ கண்காணிப்பில் உள்ளனர்.

மேலும் இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 365 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஒரே இரவில் 2,000 முதல் 3,000 வரையான இராணுவத்தினரைக் கொலை செய்தோம்!

## கருணா அம்மானுக்கு எதிரான மனு வாபஸ்

ஆனையிறவில் ஒரே இரவில் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொலை செய்தோம் என்று கருணா அம்மான் தெரிவித்த கருத்து தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைமீறல் மனு திரும்பப் பெறப்பட்டுள்ளது.

கடுவல நகரசபை உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட குறித்த மனு மீதான விசாரணை நேற்று (செவ்வாய்க்கிழமை) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று பேர் அடங்கிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இதன்போது பொலிஸ்மா அதிபரின் உத்தரவின் அடிப்படையில் கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் கருத்து தொடர்பான விசாரணை



ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மனுதாரரை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி மன்றுரைத்தார்.

எனவே, இந்தச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே விசாரணை இடம்பெற்றுவருவதால், மனுவை தொடரத் தேவையில்லை என்பதால் அடிப்படை உரிமைமீறல் மனுவைதிரும்ப பெற்றுக்கொள்ள அனுமதிக்குமாறும் நீதியரசர்களிடம் விண்ணப்பம் செய்தனர்.

இந்நிலையில் குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் குழாம், மனு திரும்பப் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்தது.

திகாமடுல்ல பகுதியில் இடம்பெற்ற பிரசார கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த கருணா அம்மான், யுத்த காலத்தில் ஆனையிறவு களமுனையில் இரண்டாயிரம் தொடக்கம் மூவாயிரம் படையினரை தான் கொன்றார் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பரமார்த்த குருவின் அரசு

**பாதுகாப்புத் துறையை நிர்வகிப்பது தொடர்பிலும் அரசியல் முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருக்கும். அவற்றை அரசியல்வாதிகளான அரசாங்கத் தலைவர்கள் சுயாதீனமாகத் தீர்மானிக்கக் கூடியதாக – கையாளக் கூடியதாக – இருந்தால்தான் அது சரியான ஜனநாயக அரசியலாக இருக்க முடியும்.**

**மாறாக, அரசியல்வாதிகள் சுயாதீனமாகத் தீர்மானிக்க வேண்டிய அரச நிர்வாக விடயங்களைக் கூட படைத் தரப்பு முடிவு செய்யும் நிலைமை இருக்குமானால் அது படைத்துறையின் – இராணுவத்தின் – ஆட்சிதான்.**

**அதைத்தான் முழு அளவில் இப்போது மியன்மாரில் (பர்மாவில்) நாம் காண்கின்றோம். பாகிஸ்தானில் கூட இப்போது ஜனநாயக ஆட்சி என்று கூறப்பட்டாலும் படைத்துறைத் தலைமையின் விருப்பை மீறி முடிவு எடுக்க முடியாத இக்கட்டிலேயே பிரதமர் இம்ரான்கானின் ஆட்சி அங்கு தொடருகின்றது.**

**அதே நிலைமையை நோக்கித்தான் இலங்கையும் சென்று கொண்டிருக்கின்றது என்பதற்கு இப்போது கட்டவிழும் விடயங்களே சான்றாக அமைகின்றன.**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த அதிரடிப் படையினரின் சிறப்புப் பாதுகாப்பு விலக்கப்பட்டமை குறித்து நேற்று இப்பத்தியில் ஒரு விடயத்தைத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தோம்.**

***“கோட்டாபயவின் அரசு முழுமையாக படைமயப்படுத்தப்பட்டு வருகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. பல தரப்புகளினால் இது தொடர்ந்து சுட்டப்பட்டு, எச்சரிக்கப்பட்டு வரும் விடயமும் கூட.***

***“அரசியல் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு விவகாரங்களும் படை அதிகாரிகளினால் அல்லது ஓய்வு பெற்ற படை அதிகாரிகளினால் கையாளப்படுகின்றன. அதனால்தான் இத்தகைய கற்றுக்குட்டித்தனமான – மோசமான –செயற்பாடுகள் அரங்கேறுகின்றன என்பது வெளிப்படையானது.”*** **– என்று நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டினோம்.**

**நாம் எழுதிய மை காய்வதற்குள் எமது அந்தக் கருத்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது. பாதுகாப்பு படை அதிகாரியாக இருந்த முன்னாள் கடற்படை உயரதிகாரியான ரியல் அட்மிரல் சரத் வீரசேகர, அந்தப் படை அதிகாரி என்ற பெயர் மூலம் சுருட்டிக் கொண்ட அரசியல்வாதி அந்தஸ்தை வைத்து எடுத்த நடவடிக்கைதான் அது என்பதை அவரே தம் வாயால் ஒப்புக் கொண்டிருக்கின்றார்.**

**இந்த விவகாரத்தில் தமது பாதுகாப்புத்துறை அதிமேதாவித்தனத்தை வேறு அவர் வெளிப்படையாகக் காட்டியிருப்பதை எண்ணி, அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.**

***“நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்த பின்னணியிலேயே அவருக்கு விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனவீர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டிருந்த நிலையில் அவருக்கு விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பு அவசியமற்றுப் போய்விட்டது. பெரியளவிலான பொது நிகழ்வில் எவ்வித உயிர் அச்சுறுத்தலுமின்றி அவரால் பங்கேற்க முடியுமாயின், அதன் பின்னர் இவ்வாறான விசேட பாதுகாப்பு அவருக்கு அவசியமற்றது. ஆகவே நானே அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பை நீக்கினேன்.”*** **– என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்திருக்கின்றார் முன்னாள் படை உயரதிகாரி என்ற அந்தஸ்தில் அரசியல் பதவி அதிகாரத்தை ஈட்டிக் கொண்ட அமைச்சர் சரத் வீரசேகர.**

**சரியோ, பிழையோ விடுதலை புலிகளுக்கு எதிரான கடும் போரைச் சமாளித்து ஏதோ வழிகளைப் பின்பற்றி வென்றமையால் கோட்டாபய ராஜபக்ஷவின் படைத்துறை வழிகாட்டல் மெச்சப்படுவது உண்மைதான்.**

**ஆனால் பாதுகாப்புத் துறையில் இத்தகைய முட்டாள்தனமான முடிவுகளை எடுக்கும் அதிகாரிகளை வைத்துக் கொண்டு அவர் கொடூர யுத்தம் ஒன்றை வென்றிருக்கின்றார் என்றால் அதில் இரண்டு விடயங்கள் உண்டு.**

**ஒன்று – அதற்காக அவர், கோட்டாபய ராஜபக்ஷ, பாராட்டப்பட வேண்டியவர்தான்.**

**மற்றது – இவ்வாறு பாதுகாப்புத்துறையில் முட்டாள்தனமான முடிவுகளை எடுத்து அவற்றைத் தமது முரட்டுத்தன பேச்சுக்களால் நியாயப்படுத்தப்படும் அதிகாரிகளை வைத்துக் கொண்டு ஒரு கொடூர யுத்தத்தை சாதாரண – முறையான – யுத்த நடவடிக்கைகள் மூலம் அவர் வென்றிருக்க முடியாது. நிச்சயம், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற அசாதாரண வழிமுறைகளைப் பின்பற்றித்தான் அவர் விடயத்தை ஒப்பேற்றியிருக்கின்றார் என்பது திண்ணம்.**

**சரி, இனி என்ன?**

**மக்களுக்கு இடையில் இறங்கி – பெரிய அளவிலான பொது நிகழ்வுகளில் பங்குபற்றி – செயற்படும் அமைச்சர்களுக்கு, டக்ளஸ் தேவானந்தா முதல் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வரை, இனி அதிரடிப்படைப் பாதுகாப்பு தேவையில்லை.**

**ஒவ்வொருவராக, அவர்கள் பெரிய பொது நிகழ்வுகளில் மக்கள் மத்தியில் இறங்கிப் பங்குபற்றியதும், விசேட அதிரடிப் பாதுகாப்பை விலக்கிக் கொள்ள வேண்டியதுதான். பொலிஸ் பாதுகாப்பை மட்டும் அவர்களுக்கு வழங்கினால் போதும்...!**

**நல்ல புத்திசாலி அரசு, அதற்கு நல்ல மதியூக மந்திரிமார் – பரமார்த்த குருவும் அவரின் சிஷ்யர்களும் போல! அது, நாட்டு மக்களின் தலையெழுத்துத்தான்.**

# ஊடகங்களைத் தணிக்கை செய்யும் திட்டம் இலங்கையில் இல்லையாம்!

## அமைச்சர் கெஹலிய கூறுகிறார்



இலங்கையில் ஊடகங்களைத் தணிக்கை செய்யும் எந்த நடவடிக்கையும் இல்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்களின் கட்டுப்பாடு மற்றும் தணிக்கை தொடர்பான கூற்றுக்கள் தவறானவை என அமைச்சரவை செய்தித் தொடர்பாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல நேற்று (செவ்வாய்க்கிழமை) ஊடகங்களிடம் தெரித்தார்.

இதேவேளை, செய்தி வெளியீடுகளில் ஒரு சார்பு அறிக்கை மற்றும் நியாயமற்ற விடயங்களுக்குத் தீர்வுகாண மட்டுமே விவாதங்கள் நடைபெற்று வருகின்றன என அவர் கூறினார்.

ஊடகங்கள் மிக முக்கியமான துறை என்றும், ஊடக பணியாளர்கள் ஒரு நாட்டில் மிகுந்த நம்பிக்கையுடனும் மரியாதைக்குரியவர்களாகவும் உள்ளனர் என்று வெகுஜன ஊடக அமைச்சர் விளக்கினார்.

மேலும், ஊடகங்களில் தெரிவிக்கப்படுகின்றமையை மக்கள் நம்புகிறார்கள். எனவே, பொதுமக்களின் கருத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம் என அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, ஊடகங்கள் தொடர்பாக ஏதேனும் விதிமுறைகள் கொண்டுவரப்பட்டால், அது ஊடக ஊழியர்களைப் பாதுகாப்பதும், சில ஊடகங்கள் வழியாக பக்கச்சார்பான ஊடக அறிக்கைகள் வெளியிடப்படுவதைத் தடுப்பதுமாகவே அமையும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சார்பு அறிக்கையிடலில் கவனம் செலுத்தும் ஊடக நிறுவனங்கள் தங்களது சொந்தப் பார்வைகள் மற்றும் சந்தேகங்களின் அடிப்படையிலேயே செயற்படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, தற்போது சில ஊடகங்கள் தொடர்பாகப் பொதுமக்களிடத்தில் மிகவும் மோசமான கருத்து உள்ளது எனவும், இதைச் சரிசெய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், ஊடகங்கள் மீது மரியாதை இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார்.

மேலும், ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், வழிப்படுத்துவதற்கும் ஒரு திட்டத்தை வகுப்பதற்கு விவாதங்கள் நடந்து வருகின்றன எனவும் இந்த நாட்டின் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பது ஊடக அமைச்சின் பொறுப்பாகும் என்றும் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், பொதுமக்கள் தங்கள் குற்றச்சாட்டுகளுக்குக் குரல் கொடுக்கவும், நீதி தேடவும் நாங்கள் ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும். - என அவர் கூறியுள்ளார்.

# தொழிலாளர் உரிமைகளைப் பாதிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 10

பெருந்தோட்டத் தொழிலாளர்களது உரிமைகளை பாதிக்கும் வகையில் பெருந்தோட்ட நிறுவனங்கள் செயற்பட்டால், அதனைத் தடுக்கும் வகையிலான பொறிமுறைகளைவகுப்பதற்குநடவடிக்கை எடுக்கப்படும் என பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

சம்பள நிர்ணய சபையில் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எனினும் அதனை ஏற்க முடியாது என்றும் 1,000 ரூபா சம்பளம் சட்டமாக்கப்பட்டால் 13 நாள்களே தொழில் வழங்கப்படும் என்பதோடு, கூட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் என்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் சார்பாக கலந்து கொண்டிருந்த ரொசான் ராஜதுரை எச்சரித்திருந்தார்.

இதுதொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றில் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதில் வழங்கிய அமைச்சர் ரமேஸ் பத்திரன, ‘பெருந்தோட்டத்துறை நிறுவனங்களுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வரமுடியாத சூழ்நிலையிலேயே, சம்பள நிர்ணய சபையின் ஊடாக இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டது. அதனை நிறுவனங்கள் முறையாக அமுலாக்க வேண்டும்.

பெருந்தொட்டத்துறைகளில் பயன்படுத்தப்படாதிருக்கின்ற காணிகள் தொடர்பாக அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. அவ்வாறான காணிகளை அடையாளம் கண்டு சரியான முகாமைத்துவ நிறுவனங்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்’ - என்றும் அமைச்சர் ரமேஸ் பத்திரன தெரிவித்தார்.

# சம்பளத்துடன் இடைக்காலக் கொடுப்பனவு; வழங்காதுவிட்டால் பகிஷ்கரிப்புக்குத் தயார்!

## ஆசிரியர் சங்கங்கள் முடிவு

அரசாங்கம் வாக்குறுதியளித்ததன் பிரகாரம் ஆசிரியர்களின் சம்பளத்துடன் இடைக்கால கொடுப்பனவை எதிர்வரும் 20 ஆம் திகதி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால், மார்ச் மாதத்தில் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தை மேற்கொள்ள அனைத்து ஆசிரியர் மற்றும் அதிபர்களின் சங்கங்கள் தீர்மானித்திருக்கின்றன என ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்ணாந்து தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

ஆசிரியர்களின் இடைக்கால கொடுப்பனவு தொடர்பாக கடந்த 1997 ஆம் ஆண்டில் இருந்து ஏற்படுத்தப்பட்ட இந்த அநியாயம் தொடர்பாகப் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசாங்கங்கள் பொய் வாக்குறுதிகளை வழங்கி இருந்தன. தற்போதைய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர், சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் மூலம் இதற்கான தீர்வைப் பெற்றுத்தருவதாக வாக்குறுதியளித்து வாக்குகளை பெற்றுக்கொண்டது.

அத்துடன், ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படும்வரை ஜனவரியில் இருந்து இடைக்கால கொடுப்பனவு ஒன்றை வழங்குவதாக இந்த அரசாங்கத்தின் அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் போன்றவர்கள் நாடாளுமன்றத்திலும் இது தொடர்பாக வாக்குறுதியளித்திருந்தனர். அது ஏமாற்றமாகும். கொவிட்19 தொற்று நிலைமை காரணமாக நாங்கள் இதுதொடர்பாக மௌனம் காத்தோம்.

என்றாலும், இதன் பிறகும் ஆசிரியர்களை ஏமாற்றுவதற்கு அரசாங்கத்துக்கு இடமளிக்கமாட்டோம். தொடர்ந்து ஏமாறுவதற்கு ஆசிரியர்கள் தயாரும் இல்லை. அதனால் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசாங்கத்துக்கு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை காலம் வழங்குவதற்கு ஆசிரியர் சங்கங்கள் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கின்றன.

அத்துடன் இதன் ஆரம்ப நடவடிக்கையாக இந்த மாதத்தில் இருந்து மாவட்ட மட்டத்தில் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்க இருக்கின்றோம். அதன் முதலாவது ஆர்ப்பாட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி அனுராதபுரத்தில் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கின்றோம். - என்றார்.

# போர்க் குற்றச்சாட்டுக்களை அரசு கருத்தில் கொள்ளாது!

## உதய கம்மன்பில அசண்டை



போர்க் குற்றங்கள் என்ற பெயரில் அரசாங்கத்தைத் தொடர்ச்சியாக அச்சுறுத்தும் நோக்கத்திலேயே ஜெனிவா நகர்வுகள் இடம்பெற்று வருகின்றது. ஆனால், இவற்றை அரசாங்கம் கருத்தில் கொள்ளப்போவதில்லை. தற்போது வடக்கு கிழக்கில் இடம்பெற்ற பேரணியும் அரசாங்கத்தை சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள் தள்ளும் முயற்சியென அரசாங்கம் கூறுகின்றது.

இராணுவத்துக்கு எதிராக எவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை முழுமையாக நிராகரிப்போம் எனவும், ஜெனிவா பிரேரணையை முற்றாக நிராகரிப்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடு எனவும் அமைச்சரவை இணை பேச்சாளர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான கடுமையான நகர்வுகள் இடம்பெறவுள்ளன என விமர்சிக்கப்பட்டு வருகின்ற நிலையில் வடக்கு, கிழக்கு தமிழர் எழுச்சிப் பேரணி விடயங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை முன்வைக்கையிலேயே அமைச்சர்களான உதய கம்மன்பில மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் இதனைக் கூறினார். இது தொடர்பாக அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் உதய கம்மன்பில கூறுகையில் –

நாட்டின் ஆட்சியை இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டதாகவே மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட மனித உரிமை பேரவை உறுப்பினர்கள் குற்றம் சுமத்துகின்றனர். அரசாங்கத்தின் ஒருசில துறைகளுக்கு இராணுவ அதிகாரிகளை நியமித்துள்ளமையே இவர்களின் பிரச்சினையாக உள்ளது. ஆனால், ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை சிவில் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதும், தகுதியான இராணுவத்தை உரிய துறைகளில் ஈடுபடுத்தி பிரச்சினைகளைத் தீர்ப்பது என்பன எந்த விதத்திலும் தவறான நகர்வு அல்ல. அதேபோல் இராணுவ தளபதி சவேந்திர சில்வா போர் குற்றவாளி எனக் கூறுகின்றமையையும் எங்கேயும் இதுவரை நிரூபிக்கவில்லை. மனித உரிமைகள் ஆணையாளர் உள்ளிட்ட பலர் விடுதலைப்புலிகளை பலப்படுத்தி அவர்களின் கையாளாக செயற்படுகின்றமை அவர்களின் இந்த நடவடிக்கைகள் மூலமாக வெளிச்சம் போட்டுக்காட்டுகின்றது.

எவ்வாறு இருப்பினும் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. எழுத்துமூலம் இந்த அறிவிப்பை அனுப்பியுள்ளோம். எந்தவோர் இடத்திலும் ஆணையாளரின் அறிக்கையை அரசாங்கம் ஆதரிப்பதாக கூறுகின்றமைக்கு நாம் தயாராக இல்லை. அதேபோல், வடக்கு கிழக்கில் தற்போது இடம்பெற்று முடிந்துள்ள பேரணிகூட மக்களை ஏமாற்றும் நடவடிக்கையேயாகும். புலம்பெயர் புலி அமைப்புகளின் பணத்தைப் பெற்றுக் கொள்ளும் வேலைத்திட்டங்களை சுமந்திரன் போன்றவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த ஏமாற்று நாடகங்கள் கூட சர்வதேச அரங்கில் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளும் சூழ்ச்சி என்பது தெளிவாக விளங்குகின்றது. – என்றார்.

# காதலர் தினக் களியாட்டத்தில் சுகாதார முறையை பின்பற்றுக!

## பொலிஸார் கோரிக்கை

சுகாதார ஆலோசனைகளை மீறி காதலர் தின களியாட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



இவ்வாறான களியாட்ட நிகழ்வுகளை முன்னெடுப்பவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த நாள்களில் விருந்துபசார மற்றும் திருமண நிகழ்வுகளிலேயே அதிக கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் எனக் குறிப்பிட்ட அவர், சமூக வலைத்தளங்களின் ஊடகவே பல்வேறு களியாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனக் கூறினார்.

இதனால், காதலர் தினம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார அதிகாரிகள் அனுமதியின்றி களியாட்டங்கள் மற்றும் விருந்துபசாரங்களை முன்னெடுப்பதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

# உலகில் அதிக விஷத்தை உண்ணும் நாடு இலங்கை!

## விசேட வைத்திய நிபுணர் வேதனை

உலகில் அதிகமாக விஷத்தை உண்ணும் நாடு இலங்கை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர், விசேட வைத்திய நிபுணர் அனுருத்த பாதெணிய தெரிவித்துள்ளார்.



கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

நாம் உண்ணும் உணவுகளின் தரவுகளுக்கு அமைய உலகில் அதிகப்படியான வித்தை இலங்கையர்கள் உண்கின்றனர்.

இந்தவிடத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அமைச்சர்கள் உள்ளமையால் நான் ஒரு கோரிக்கை விடுக்கிறேன்.

நாம் 2010 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் வித்தைச் சேர்க்க வேண்டாம் எனக் கோருகிறோம். நாடாளுமன்றம் உங்களின் கைகளில் உள்ளது. விஷம் சேர்க்கப்படுகின்றமை தடுத்து நிறுத்துங்கள்.– என அவர் மேலும் தெரிவித்துள்ளார்..

# காத்தான்குடி 10 கிராமசேவகர் பிரிவு 40 நாள்களின் பின்னர் மீள விடுவிப்பு!





காத்தான்குடியில் உள்ள 10 கிராம சேவகர் பிரிவுகள் சுமார் 40 நாள்களின் பின் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்ட நிலையில், அப்பகுதிகளில் நேற்று வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் முடக்கப்பட்டிருந்த காத்தான்குடி நகரின் 10 கிராம சேவகர் பிரிவுகளிலும் வர்த்தக நிலையங்கள் நேற்று காலை முதல் திறக்கப்பட்டுள்ளன.

கடந்த டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முதல் கொரோனா பரவல் அதிகரிப்பை அடுத்து, காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவின் 18 கிராம சேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

தொடர்ந்தும் கடந்த 40 நாள்களாக 10 கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் சட்டம் அமுலில் இருந்தது. நேற்று 9 ஆம் திகதி முதல் 4 வீதிகளைத் தவிர 10 கிராமசேவகர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்படுகின்றன என மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அறிவித்தமையையடுத்து, நேற்று காலை முதல் வர்த்தக நிலையங்கள் திறக்கப்பட்டிருந்தமையுடன் பாடசாலைகள், பள்ளிவாசல்கள் என்பனவும் திறக்கப்பட்டன. இத்துடன் வழமையான அலுவல்களும் இடம்பெற்று வருகின்றன.

# கொவிட் பாதித்த துறைகளுக்கு நிதி ஆசிய முதலீட்டு வங்கி தீர்மானம்!

கொவிட் - 19 தொற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா மற்றும் ஆடை போன்ற துறைகளுக்கு நிதியளிக்க ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி ஒப்புக் கொண்டுள்ளதாக அரசாங்கம் நேற்று (செவ்வாய்க்கிழமை) தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கான பொருத்தமான ஒப்பந்தத்தில் நுழைவதற்கான திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் கொவிட் தொற்றால் அதிகளவு பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலா, ஆடை, கட்டுமானம், வர்த்தகம், உற்பத்தி, விவசாய ஏற்றுமதி மற்றும் சுகாதாரம் போன்ற துறைகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

# மன்னார் மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகம் உருவாக்குவது குறித்து விசேட கலந்துரையாடல்!





மன்னார் மாவட்டத்தில் 'மாந்தை வடக்கு' எனும் புதிய பிரதேச செயலகப் பிரிவொன்றை அமைப்பது தொடர்பாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில், இதுதொடர்பாகத் தீர்மானத்தின் முன்மொழிவை தேசிய பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பிவைக்கும் நோக்கில் உயர்மட்டக் கலந்துரையாடல் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான குலசிங்கம் திலீபன், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் மற்றும் பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, மன்னார் மாவட்டத்தில் 'மாந்தை வடக்கு' எனும் புதிய பிரதேச செயலகப் பிரிவை அமைப்பது என்ற தீர்மானத்தின் முன்மொழிவு பெற்றுக்கொள்ளப்பட்டு தேசிய பாதுகாப்பு உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பிவைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் – சிங்கள மக்களின் அமைதி வாழ்க்கையை விரும்பாதோரே இலங்கையைத் தண்டிக்க முயற்சி!

## இப்படிக் கூறுகின்றார் அமைச்சர் விமல்

இலங்கையில் தமிழ் சிங்கள மக்கள் அமைதியாக வாழ்வதை விரும்பாதவர்கள் தற்போது ஜெனிவாவில் கோஷம் எழுப்பி இலங்கையைத் தண்டிக்க முயற்சித்துக்கொண்டுள்ளனர் என அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

முன்னைய ஆட்சியில் அப்போதைய வெளிவிவகாரத் துறை அமைச்சர் மங்கள சமரவீர இலங்கையைக் காட்டிக்கொடுத்து, அமெரிக்கா கொண்டு வந்த பிரேரணையை ஆதரித்ததன் விளைவாகவே தம்மால் எந்தவொரு சுயாதீன தீர்மானமும் எடுக்க முடியாது போனது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் தாம் இன்று அனைத்தையும் நிராகரிப்பதாக வெளிப்படையாகத் தெரிவித்துள்ளோம் என்றும் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணையில் இருந்து தாம் வெளியேறிவிட்டோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தமது இராணுவம் மீதும் தமது ஆட்சி மீதும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வேறு வழியில் தமது இராச்சியத்தை பலவீனப்படுத்த முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் விமல் தெரிவித்துள்ளார்.

எனினும் தம்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ள சகல குற்றச்சாட்டுகளுக்கும் அரசாங்கம் பதில் தெரிவிக்கும். அதேபோல் தமது இராணுவத்தைக் காப்பாற்றும் சகல நடவடிக்கைகளையும் தாம் முன்னெடுப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திக்கொடுத்த பின்னர் விடுதலைப் புலிகளை அழித்ததை விரும்பாதவர்களும் இந்நாட்டில் தமிழ் சிங்கள மக்கள் அமைதியாக வாழ்கின்றமையை விரும்பாதவர்களுமே தற்போது ஜெனிவாவில் கோஷம் எழுப்பி இலங்கையை தண்டிக்க முயற்சித்துக் கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



## காலி முகத்திடலில் மாதிரி வர்த்தக கூடங்களை பார்வையிட்ட கோட்டா!



கொழும்பு காலி முகத்திடலில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மாதிரி வர்த்தக கூடங்களை கடந்த திங்கட்கிழமை முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பார்வையிட்டார்.

காலி முகத்திடலை மையமாகக் கொண்ட அபிவிருத்தி திட்டத்தின் மற்றுமொரு கட்டமாக இந்த வர்த்தக கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

இலங்கை கடற்படை புதிய திட்டத்தின் படி, இந்த மாதிரி வர்த்தகக் கூடங்களை வடிவமைத்துள்ளது.

காலி முகத்திடலுக்கு அழகு சேர்க்கும் வகையில் இந்த வர்த்தக கூடங்களை நிர்மாணிக்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் ஓய்வு பெற்ற ஜெனரல் தயா ரத்நாயக்க ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையை கண்காணிக்க ஐவர் அடங்கிய குழு நியமனம்!

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு அறிக்கையைத் தாக்கல் செய்ய ஐவர் அடக்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த சீமெந்து தொழிற்சாலை வளாகத்தில் சீமெந்து உற்பத்தி கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு கைத்தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அதற்கமைவாக அங்கிருக்கும் பயன்பாட்டுக்கு உதவாத பொருள்களை அகற்றி வளாகத்தைத் துப்புரவு செய்வதற்கு ஏற்ற நடவடிக்கையை எடுப்பதற்காகவே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஐவரடங்கிய மேற்படி குழு வழங்கும் பரிந்துரைகளின் அடிப்படையில் பயன்பாட்டுக்கு உதவாத பொருள்களை அங்கிருந்து அகற்ற கைத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## நில ஆக்கிரமிப்பைக் கைவிடுங்கள் ஆதிவாசிகளின் தலைவர் வழக்கு!

கொழும்பு, பெப்.10

மகாவலி அதிகாரசபை தமது நிலங்களை ஆக்கிரமித்து அந்த நிலங்களை சோளம் பயிரிடும் தனியார் நிறுவனங்களுக்குக் கையளிக்க எடுத்த முடிவை இரத்துசெய்யக் கோரி ஆதிவாசிகளின் தலைவர் உருவாரிகே வன்னிலா அத்தோ மற்றும் சுற்றாடல் நீதி மையம் ஆகியன மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

மகாவலி அதிகாரசபை, வனதிணைக்களப் பணிப்பாளர்நாயகம், வனஜீவராசிகள் பணிப்பாளர், வனஜீவராசிகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் செயலாளர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

மகாவலி அதிகாரசபையின் கீழ் பல நூற்றாண்டுகளாக வசித்து வந்த தனக்கு சொந்தமான நிலங்களை கையகப்படுத்தவும், சோளம் பயிரிடும் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஆதிவாசிகளின் தலைவர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

## கொரோனா தொற்று நீர்வழியாக பரவாது!

### அரசாங்கமே அறிவிப்பு



கொரோனாத் தொற்று நீர்வழியாக பரவாது என கொரோனா ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார எழுப்பிய கேள்விக்கு நாடாளுமன்றில் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அனுராதபுரம் கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் கொரோனாத் தொற்று உறுதியான நோயாளிகள் பயன்படுத்திய கழிவுநீர் பாடசாலைக்கு அருகிலுள்ள ஒரு பகுதியில் பாய்வதாக ரோஹண பண்டார தெரிவித்தார்.

நீர் மாசுபடும் என்பதால் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்களை அடக்கம் செய்யும் நடவடிக்கை இலங்கையில் நிராகரிக்கப்பட்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே கெப்பிட்டிகொல்லாவ பகுதியில் பாயும் கழிவு நீரால் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹண பண்டார குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, கொரோனா தொற்று காற்று வழியாக மட்டுமே பரவுவதாகவும் நீர் வழியாக பரவவில்லை என்றும் தெரிவித்தார்.

இருப்பினும் இயற்கை நீருடன் இத்தகைய அசுத்தமான நீர் கலப்பது வேறு நோய்கள் தோன்றுவதற்கு வழிவகுக்கும் என்பதால் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

## தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் வைகாசி மாதத்துக்குள் நிறைவடையும்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அறிவிப்பு

இலங்கையில் எதிர்வரும் வைகாசி மாதத்திற்குள் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை அரசாங்கம் நிறைவு செய்யும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் பேசிய அவர், கொரோனா ஆபத்து இன்றி சுற்றுலாப் பயணிகள் பார்வையிடக்கூடிய பாதுகாப்பான நாடாக இலங்கை மாறும் என்றும் குறிப்பிட்டார்.



இதேவேளை இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

மேலும் சுற்றுலா மேம்பாட்டு ஆணைக்குழுவால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

## பிரபல சிறுகதை எழுத்தாளர் ஷக்திக சத்குமார விடுவிப்பு!

சட்டமா அதிபரின் உத்தரவின் பிரகாரம் இலங்கையின் பிரபல சிறுகதை எழுத்தாளர் ஷக்திக சத்குமார, விடுவிக்கப்பட்டுள்ளார் என சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி நிஷார ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

2019 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஷக்திக சத்குமார தனது முகப்புத்தத்தில் அர்தா என்ற தலைப்பில் நவீன சிறுகதையை வெளியிட்டு அடுத்தடுத்த நாள்களில், பிக்குகளையும் பௌத்தர்களை அவமதித்தார் எனத் தெரிவித்து பிக்குகளின் சங்கம் பொலிஸில் முறைப்பாட்டை வழங்கியது.

இருப்பினும் குறித்த சிறுகதை மூலம் பௌத்த மதத்தையோ அல்லது எந்த சமூகத்தையோ தான் அவமதிக்கவில்லை என ஷக்திக சத்குமார குறிப்பிட்டிருந்தார்.

இதனை அடுத்து ஏப்ரல் மாதம் முதலாம் திகதி பௌத்த பிக்குமாரை தனது எழுத்துக்களால் விமர்சித்தாரென சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய ஐ.நா. ஆதரவு சர்வதேச உடன்படிக்கையின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் ஷக்திக சத்குமாரவின் வழக்கு விசாரணை மீண்டும் மீண்டும் தாமதங்களுக்கு உட்பட்ட நிலையில் அவரை விடுதலை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் - பொலிகண்டி எழுச்சிக்கு ஆதரவு: 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கார்களில் பேரணி!

## கனடாவிலும் தமிழ் உணர்வு பொங்கிப் பிரவகித்தது





தமிழ் தாயகத்தில் முன்னெடுக்கப்பட்ட பொத்துவில் முதல் பொலிகண்டி (P2P) வரையான எழுச்சிப் பேரணிக்கு ஆதரவாக கனடாவில் புலம்பெயர் தமிழர்களால் கார் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட கார்களில் கொடிகளை ஏந்தியவாறு நீண்ட தூர பவனி இடம்பெற்றுள்ளது.

பிரம்டனில் ஆரம்பிக்கப்பட்ட பேரணி, அஜக்ஸ், மிசிசாகா, மார்க்கம் ஊடாக ரொறன்ரோவின் குயின்ஸ்பார்க் பகுதியில் நிறைவடைந்தது.

தமிழர் தாயகத்தில் இடம்பெறும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும், நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்கான தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுப்பதை நோக்கமாகக் கொண்டு பொத்துவில் முதல் பொலிகண்டிப் பேரெழுச்சிப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த நீதிக்கான பேரணியில் வலியுறுத்தப்பட்ட கோரிக்கைகளை, தமிழ் கனேடியர்கள் முழக்கமாக முன்வைத்து கார் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணியில் பிரம்டன் மேயர் ஹர்கிரத் சிங் கலந்துகொண்டமையுடன், கனேடிய மக்களும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த பிரம்டன் மேயர், தமிழ் சமூகத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க தோளோடு தோள் நிற்கிறோம் எனத் தெரிவித்தார்.

அத்துடன், இனப்படுகொலை, அரசியல் கைதிகள் பிரச்சினை என தமிழர் விடயத்தில் தொடர்ந்து குரல் எழுப்புவோம் எனவும், நீதிக்காக வாதிடுகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

மேலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் தூபி அழிக்கப்பட்டமை தொடர்பாகவும் பிரம்டனில் முள்ளிவாய்க்கால் நினைவிடம் கட்டும் திட்டங்களையும் குறிப்பிட்டார்.

# ஜெனிவாவின் முன்றில் வரை தொடரும் சைக்கிள் பயணம்!

**வலுக்கிறது ஆதரவு**



நெதர்லாந்து குற்றவியல் நீதிமன்றின் முன்பாக கடந்த திங்கட்கிழமை ஜெனிவா நோக்கிய ஈருருளிப்பயணமும் கவனவீர்ப்பு ஒன்றுகூடலும் இடம்பெற்றது.

9.45 மணியளவில் குற்றவியல் நீதிமன்றின் முன்பாக அகவணக்கத்துடன் ஈருருளிப் பயணம் ஆரம்பிக்கப்பட்டு பெல்ஜியம் ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையக முன்றிலை நோக்கி பயணப்படுகிறது.

தாயகத்தில் இடம்பெற்ற இன அழிப்பிற்குநீதிகேட்டு உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில் தமிழின அழிப்பிற்கான நீதியைப் பெற ஐக்கிய நாடுகள் அவை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திடம் நீதி விசாரணையை ஒப்படைப்பதற்கான அவசியத்தை வலியுறுத்திய ஜெனிவா பேரணிக்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்தப் பயணம் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும் குளிரிலும் எமது மக்களுக்கான நீதி வேண்டி தமிழின உணர்வாளர்கள் இந்த ஈருருளிப் பயணத்தை மேற்கொள்கின்றமை, நெதர்லாந்தில் இருந்து அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக இருவர் இணைந்து பயணிப்பதும் எம் தமிழ் இனத்தின் அவலத்திற்கு வெகு விரைவில் தீர்வு கிடைக்கும் என்று நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது என்ற இந்த கடுங்குளிரிலும் கலந்துகொண்ட மக்கள் உரைத்தவாறு அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி வாழ்த்துக்கள் தெரிவித்துச் சென்றார்கள்.

இந்த ஈருருளிப் பயணம் இன்று 10 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையக முன்றிலில் கவனவீர்ப்பு ஒன்றுகூடலில் கலந்து கொண்டபின், தொடர்ந்தும் பயணிக்கவுள்ளது.

இந்த ஈருருளிப் பயணம் ஜெனிவா முன்றில்வரை பயணிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தடுப்பூசியைத் தனியார் துறை கொள்வனவு செய்ய முடியாது!

## விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10

அஸ்ட்ரசெனிகா மற்றும் பைஸர் நிறுவனங்களின் கொவிட் தடுப்பூசிகள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கையிலும் தனியார் துறையினர் தடுப்பூசியை கொள்வனவு செய்ய முயற்சித்தாலும் அவற்றைப் பெறுக்கொள்ள முடியாது என்று விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்கிரம தெரிவித்தார்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு கடந்த திங்கட்கிழமை இணையவழியூடாக நடைபெற்றது. இதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

முதல் முறையாக தடுப்பூசி வழங்கியதன் பின்னர் இரண்டாம் முறைதடுப்பூசி 4 வாரங்களுக்கு பின்னரே வழங்கப்படவேண்டும் என்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. ஆனால் தற்போது 12 வாரங்களின் பின்னர் வழங்குவது சிறப்பானதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

எனவே, இரண்டாம் முறை தடுப்பூசி வழங்குவதற்கான கால எல்லை தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

ஏற்கவே தொற்றுறுதியாகி பின்னர் குணமடைந்தோருக்கும் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும் என்ற கொள்கை சர்வதேச ரீதியில் பின்பற்றப்படுகிறது. அதற்கமையவே இலங்கையிலும் தடுப்பூசி வழங்கப்படும்.

இலங்கையிலுள்ள சில நிறுவனங்கள் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்து அவற்றை வழங்குவதற்கு முன்வந்தன. இது தொடர்பாக அஸ்ட்ரசெனிகா மற்றும் பைஸர் ஆகிய நிறுவனங்களுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டன.

எனினும் தற்போது இவற்றை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும் தீர்மானமில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளார்கள். - என்றார்.

# கொரோனாத் தொற்றினால் முதலாவது பொலிஸ் பலி!

மொனராகலை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரியொருவர் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ்திணைக்களத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக உயிரிழந்த முதல் அதிகாரி இவர்தான் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரி 59 வயதுடையவர் என அவர் தெரிவித்தார்.

குறித்த பொலிஸ் அதிகாரி மாரடைப்பு காரணமாக மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார். இந்நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மூன்று குழந்தைகளின் தந்தையாகிய பொலிஸ் அதிகாரி ஓய்வுபெறத் தயாராக இருந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரசவித்த சிசுவை மையவாடியில் புதைத்தார் தாய்; பிரேத பரிசோதனைக்காக சடலம் தோண்டியெடுப்பு!

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள பூநொச்சிமுனையில் தாய் ஒருவர் சிசு ஒன்றை வீட்டில் பிரசவித்து அந்த சிசு இறந்துள்ளதாக மையவாடியில் புதைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் நீதிமன்றில் வழக்கு தொடுத்தமையை யடுத்து புதைக்கப்பட்ட சிசுவின் சடலம் கடந்த திங்கட்கிழமை நீதிவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் கருவுற்றுள்ள நிலையில் கடந்த 2 ஆம் திகதி சிசு ஒன்றை வீட்டில் பிரசவித்துள்ளார்.

பின்னர் சிசு இறந்து பிறந்துள்ளதாக அப்பகுதி பள்ளிவாசலுக்கு அறியப்படுத்தி சிசுவின் சடலத்தை பூநொச்சிமுனை மையவாடியில் புதைத்துள்ளார்.

இதன்பின்னர் சிசுவை பிரசவித்த தாயார் சுகவீனம் காரணமாக தனியார் வைத்தியசாலையை நாடிய நிலையில் அந்த வைத்தியசாலை வைத்தியர் உடனடியாக அம்புலன்ஸ் வரவழைத்து போதனா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அவரை அனுப்பியுள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் தாயாருக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததையடுத்து புதைக்கப்பட்ட சிசுவின் சடலத்தை தோண்டி எடுத்து பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை மையவாடியில் புதைக்கப்பட்ட சிசுவின் சடலத்தை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எல்.எம். றிஸ்வான் முன்னிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை சட்ட வைத்தியர்களான வைத்தியர் சி.எஸ். ஜலப்பெரும, வைத்தியர் ஈ.பிள்யூ.என். ஈ. சாமிக்க, வைத்தியர் எஸ்.சிவகாந்தன் ஆகியோர் பார்வையில் சடலம் தோண்டி எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# 290 இலங்கையர்கள் ஜோர்தானிலிருந்து நாடு திரும்பினர்

தொழில்வாய்ப்புக்காக ஜோர்தானுக்கு சென்று, அங்கு பல்வேறு நெருக்கடிகளுக்குள்ளான 290 இலங்கையர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி அவர்கள் ஜோர்தானின் அம்மானிலிருந்து ஸ்ரீலங்கா ஏயர்லைன்ஸ் விமான சேவைக்குச் சொந்தமான யுஎல் - 554 என்ற விமானத்தில் நேற்று அதிகாலை 4.15 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் திருப்பி அனுப்பும் வேலைத்திட்டத்தின் கீழ் இவர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். விமான நிலையத்தை இவர்கள் வந்தடைந்ததும், பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டதுடன், இலங்கை இராணுவத்தினரால் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காகவும் அழைத்துச் செல்லப்பட்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir






# முல்லைத்தீவின் மருத்துவ சொத்தொன்று சரிந்தது

முல்லைத்தீவின் பழைய பேருந்து தரிப்பிடத்தின் பின்பக்கம் ,வைரவர் கோவிலடியின் அருகாக எப்போதும் மருத்துவம் பெறக்கூடியதாக, திறந்தே கிடக்கும் கதவுடன், கனிவான பேச்சுடன் காத்திருக்கும் இல்லம்தான் குணரத்தினம் வைத்தியரின் இல்லம் .

ஆலயத்தோடு அண்டிய அமைதியான சூழலில் மென்மையே உருவான குரலோடும் அன்பே உருவான உடலோடும் நோய் என்று வருபவரை தன் பேச்சால் குணப்படுத்தும் குணரத்தினம் டாக்டர் பெப்ரவரி 5 ஆம் திகதி தனது 93 ஆவது வயதில் கனடாவில் இயற்கை எய்தியுள்ளார் .

முல்லைத்தீவு மாவட்டத்தின் சுற்று வட்டார பகுதிகளான குமுளமுனை, மாமூலை, தண்ணீரூற்று, சிலாவத்தை, வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், கள்ளப்பாடு, வலைஞர்மடம், புதுக்குடியிருப்பு என நகரை அண்டிய 7 தொடக்கம் 8 கிலோமீற்றர் சுற்றளவும் உள்ள அனைத்து மக்களின் பேசும் தெய்வமாக திகழ்ந்தவர் டொக்டர் குணரத்தினம் .

1955 ஆம் ஆண்டில் இருந்து கிட்டதட்ட 40 வருடங்களுக்கு மேலாக 1990 ஆம் ஆண்டுவரை முல்லைத்தீவு மக்களின் மருத்துவ தேவைகளை குறைந்த செலவோடு நிவர்த்தி செய்துகொண்டு இருந்த மருத்துவ பெருந்தகையின் இறப்பை அறிந்த மக்கள், சொல்லொணா துயருடன் மனங்கலங்கி துடிக்கின்றனர். அந்த அளவுக்கு அவரின் கனிவான பேச்சும் மருத்துவத்தில் அவர் செலுத்திய அக்கறையான செயற்பாடுமே காரணமாகின்றன .

எந்த நேரம் வேண்டுமானாலும் அவரின் மருத்துவம் நமக்கு கிடைக்கும் அளவு அவர் எப்போதும் சேவை மனப்பான்மையுடன் இருப்பார், நோய் என்று வருபவரை கைபிடித்து இருத்திப் பேசும் தருணத்திலேயே அரைவாசி நோய் குணமடையும் கனிவான பேச்சு கொண்ட மருத்துவர்தான் குணரத்தினம் வைத்தியர்.

தான் தாயகத்தில் இருந்த அத்தனை காலங்களிலும் தனது ஊர் மக்கள் மட்டுமன்றி அயலூர் மக்களையும் அன்போடு உபசரித்து தன பேச்சாலும் கனிவான நடைமுறையாலும் குணப்படுத்தும் மருத்துவ முத்து தன் இறுதி மூச்சை இழந்துவிட்டது.

போருக்கு முன்னர் பெரும் வசதி வாய்ப்புகளை கொண்டிராத முல்லைத்தீவு பெருநகரின் கல்வி, சுகாதார வசதிகளை இவர்போன்ற பெருந்தகைகளே தூக்கி நிலை நிறுத்திவைத்தனர் என்பதை இன்றும் அந்த நகர் மக்கள் மறந்துவிடவில்லை .

பெயருக்கு ஏற்றால் போல குணத்தில் சிறந்த குணரத்தினம் வைத்தியரின் மறைவு முல்லைத்தீவு மண்ணுக்கும் மக்களுக்கும் பேரிழப்பே - அவரின் ஆத்மா சாந்திக்காக பிரார்திக்கிறது முல்லை நகரமும் அவர் பால் அன்புகொண்ட மக்களும் .

# பேரணியில் பங்கேற்ற அரசியல் புள்ளிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல்

## பருத்தித்துறையில் பொலிஸார் முயற்சி

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 3 பொலிஸ் நிலையங்களால் 'பி' அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே பேரணிக்குத் தடை கோரி 'ஏ' அறிக்கையூடாக பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களால் தொடரப்பட்ட வழக்குக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளது எனத் தெரி வித்தே, இந்தப் 'பி' அறிக்கைகள் பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றக் கட்டளைச் சட்டம் 55 (1), 56 (2) (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்தப் 'பி' அறிக்கைகளை பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தனித்தனியே தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உட்பட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராகவே நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று திறந்த மன்றில் அழைக்கப்பட்டு மார்ச் 29, மே 19 மற்றும் மே 20ஆம் திகதிகளுக்குத் தவணையிடப்பட்டுள்ளன. இதேபோன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலும் நேற்றுமுன்தினம் பொலிஸார் 'பி' அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை

## வடக்கு மக்களின் வாக்கே சாட்சி; அமைச்சர் தினேஷ் புதுக்கதை

இலங்கையில் 2010இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கு வடக்கில் பெரும்பாலான மக்கள் வாக்களித்தனர். படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்பதற்கு இதுவே சிறந்த சான்றாகும்.

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் இறுதிப்போரில் இடம் பெற்ற குற்றங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக ஜெனிவாவில் இம்முறை கடுமையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அமைப்புகள் வெளியிட்டு வரும் அறிக்கைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் இன்றளவிலும் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்கும் தமி ழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்காக ஜெனிவா சென்று பொய்யுரைப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இலங்கையின் இறைமை மற்றும் சுயாதீனத்தில் சர்வ தேசம் தலையிட வேண்டும் என்பதே அவர்களின் வலியுறுத்தலாக இருக்கின்றது. இதற்கு உடன்பட முடியாது என நாம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம்.

போரில் நாம் வெற்றி பெறும்போது இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவே செயற்பட்டார். அவர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வெற்றிபெற வைப்பதற்காக வடக்கில் வாக்குக் கேட்டனர். இதன்படி வடக்கில் மட்டும் எம்மைத் தோற்கடித்து அங்கு சரத்பொன்சேகாவே வெற்றி பெற்றார். படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்ற சான்றே அதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? - என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

# ஐ.நாவுக்கு அடிபணிய இலங்கை தயாரில்லை

## அமைச்சர் கெஹலிய சண்டித்தனம்

கொழும்பு, ஜன. 10

இலங்கை அரசு ஐ.நா. சபையினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு அடிபணிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தயாராக இல்லை.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத் துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குற்றச்சாட்டுக்களை அரசு முழுமையாக மறுக்கின்றது. அது போன்ற சம்பவங்கள் இலங்கையில் நடைபெறவில்லை என்பதை பிரிட்டன் உள்துறை அமைச்சின் அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

புலம்பெயர் தமிழர்களால் முன்வைக்கப்படும் பக்கச்சார்பான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இலங்கையின் 30 வருட காலப் போரை நிறைவுக்குக் கொண்டு வந்த மனிதாபிமான நடவடிக்கையில் ஏதேனும் சட்ட விரோதச் செயற்பாடுகள் நடைபெற்றுள்ளனவா என்பதை அரசு உள்ளக விசாரணையொன்றின் மூலம் கண்டறியவுள்ளது.

உள்ளக விசாரணைகளின் போது, ஏதாவது அநீதி இடம்பெற்றுள்ளது எனத் தெரியவந்தால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அரசு தயங்காது - என்றார்.

# பால் விவசாயிகளின் கடன் தொகையை 10 லட்சமாக அதிகரிக்க பிரதமர் அறிவிப்பு



பால்விவசாயிகளின்கடன்தொகையை 10 லட்சம் வரை அதிகரிக்குமாறு பிரதமர் அறிவுரை வழங்கியுள்ளார்.

பால் விவசாயிகளுக்காக 2021 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட 5 லட்சம் ரூபா கடன் தொகையை ஒரு மில்லியனாக (10 லட்சம்) உயர்த்துவதற்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

பிற பொது சலுகைகள் உட்பட பட்ஜெட்டில் முன்மொழிவுகளை அமுல்படுத்துவது தொடர்பான நிதி அமைச்சகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற முன்னேற்ற மதிப்பீட்டுக் கூட்டத்தின்போதே பிரதமர் இந்த உத்தரவுகளை பிறப்பித்தார்.

அதன்படி அடுத்த வாரம் முதல், பால் விவசாயிகள் தங்கள் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக 4 சதவீத வட்டிக்கு 10 லட்சம் ரூபா வரை கடன் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தச் சந்திப்பின்போது உரையாற்றிய நிதியமைச்சின் செயலாளர் எஸ்.ஆர். அட்டிகல்லே, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் மற்றும் தற்போது பெறப்பட்ட வீட்டுக் கடன்கள் 7 சதவீத வட்டி விகிதத்தில் இயக்கப்படுவதாகக் கூறினார்.

அரசு மற்றும் அரசு சாரா ஊழியர்களின் கூரைகளில் சோலார் பேனல்களை நிறுவுவதற்கு தற்போது 4 சதவீத வட்டி விகிதத்தில் 8 லட்சம் ரூபா வரை கடன்கள் வழங்கப்படுகின்றன.

இந்த பருவத்தில் நெல் வாங்க சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் ஹெஷான் செமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார்.

நெல் வாங்குவதற்காக கடன்களை விரைவாக வழங்குமாறு பிரதமர் அறிவுறுத்தியதுடன், இது பீர் உற்பத்தி போன்ற துணை தயாரிப்புகளுக்கு பெரிய அளவில் நெல் வாங்குவதை மட்டுப்படுத்தும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நகர்ப்புற மேம்பாட்டு ஆணையம், மத்திய மாகாண வீட்டுவசதி திட்டங்களுக்கு 6.25 சதவீத வட்டி விகிதத்தில் கடன் வழங்கத் தொடங்கியுள்ளது.

சமுர்த்தி உறுப்பினர்களுக்கு மின்சாரம் கிடைப்பது உள்ளிட்ட சலுகைக் கடன்களை விரைவாக வழங்குவது தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு கடன்களில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக, அரசாங்கம் இப்போது அந்நிய முதலீட்டில் அதிக கவனம் செலுத்துகிறது என்று நிதி அமைச்சக செயலாளர் தெரிவித்தார்.

இதற்கிடையில், உள்நாட்டு வருவாய் துறைக்கு ஒன்லைனில் வரி செலுத்துவது இன்று (நேற்றுமுன்தினம்) முதல் செயலில் இருக்கும் என்றும், ஐந்து வங்கிகள் அதற்கு ஒப்புக் கொண்டுள்ளன எனவும் அதிகாரிகள் தனக்குத் தெரிவித்தனர் எனப் பிரதமர் கூறினார்.

கடன்கள் மற்றும் குத்தகைகளை முன்கூட்டியே திருப்பிச் செலுத்துவதற்கு வங்கிகள் 3 சதவீதம் கட்டணம் செலுத்த வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் சுட்டிக்காட்டியதோடு, கொடுப்பனவை முழுமையாக நிறுத்த வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

இராஜாங்க அமைச்சர்களான அஜித் நிவார்ட் கப்ரால், ஹெஷான் செமசிங்க, பிரதமர் செயலாளர் காமினி சேனாரத் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். அட்டிகல்லே மற்றும் நிதி அமைச்சின் அனைத்து நிறுவனங்களின் தலைவர்கள் உட்பட பல அதிகாரிகள் இந்தச் சந்திப்பின்போது கலந்து கொண்டனர்.

## தொழிலாளர் சம்பள அதிகரிப்பு சம்பள நிர்ணய சபை அனுமதி!

தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளத்தை 900 ரூபா வரை அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேலதிக சம்பளமாக 100 ரூபாவை பெற்றுக்கொடுக்க சம்பள நிர்ணய சபை அனுமதி வழங்கியுள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை அனுமதி வழங்கியுள்ளதாக தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

தோட்ட தொழிலாளர்களின் அடிப்படை சம்பளம் தொடர்பாக கடந்த திங்கட்கிழமை பிற்பகல் சம்பள நிர்ணய சபையில் இடம்பெற்ற பேச்சில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

இந்த பேச்சு தோட்ட முதலாளிமார் சம்மேளத்தின் சார்பில் 08 பேரும் தோட்ட தொழிற்சங்கங்கள் சார்பில் 08 பேரும் அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி 03 பேரும் கலந்துகொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஒரு வார வீதி விபத்துக்களில் 45 பேர் பலி; 266 பேர் காயம்!

கொழும்பு, ஜன. 10

இலங்கையில் கடந்த ஒரு வாரத்தில் பதிவான வீதி விபத்துக்களில் சிக்கி 45 பேர் உயிரிழந்தமையுடன், 266 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாளொன்றுக்கு சராசரியாக வீதி விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்திருக்கின்றமையை இந்த தகவல் வெளிப்படுத்திக் காட்டுவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், பிரதிப் பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

காயமடைந்த 266 பேரில் 94 பேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும், கம்பஹா, கண்டி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களிலேயே அதிகளவான விபத்துக்கள் பதிவாகியும் உள்ளன.

அதேநேரம் ஜனவரி 31 முதல் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை நாட்டில் மொத்தம் 403 விபத்துக்கள் பதிவாகியுள்ளன எனவும் அஜித் றோஹண மேலும் சுட்டிக்காட்டினார்.

## சுற்றுலாத் துறையின் மூலம் 10 லட்சம் அமெரிக்க டொலர்களை ஈட்டத் திட்டம்!

சுற்றுலாத் துறையின் மூலம் இந்த வருடம் 10 லட்சம் அமெரிக்க டொலர்களை வருமானமாக ஈட்டத் திட்டமிட்டு செயற்படுமாறு பொருளா தார மறுமலர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ சுற்றுலாத்துறை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

சுற்றுலாத்துறையின் அபிவிருத்தி தொடர்பாக அதன் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.


மேலும் இதன்போது தெரிவித்த அவர் -

சுற்றுலாத்துறையில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் தடுப்பூசி வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.

அத்துடன் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக ஏற்றுமதியின் மூலம் பெறுகின்ற வருமானம் மாத்திரம் போதுமானதல்ல என்றும் எனவே, தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப சுற்றுலாத்துறையின் ஒத்துழைப்பு இன்றியமையாதது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் கொரோனா வைரஸ் பரவலைத் தொடர்ந்து, சுற்றுலாத் துறை வீழ்ச்சியடைந்துள்ளது. இயல்பான நிலையில் பல நாடுகள் மீண்டும் தங்கள் நாடுகளில் சுற்றுலாத் துறையை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் அறிக்கை பிரதியைக் கோருகிறார் மல்கம் ரஞ்சித்!



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ள ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான அறிக்கையின் பிரதியொன்றை தமக்கு வழங்குமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரியுள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதிக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக பேராயரின் ஊடக பேச்சாளர் பேராசிரியர் கமிலஸ் பெர்னாண்டோ ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் தொடர்பாக அறியப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர்கள் தொடர்பில் நாட்டின் சட்டத்துக்கு அமைய செயற்படுமாறு பேராயர் கோரியுள்ளார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## வவுனியா சிறைச்சாலையில் கொரோனாத் தொற்றாளர்!

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்த கைதி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பைச் சேர்ந்த குறித்த நபர் கடந்த 31 ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்வதற்கான மாதிரிகள் பெறப்பட்டிருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை பரிசோதனைக்கான முடிவுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. அதன்படி அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

இந்த விடயம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை சுகாதார பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

### கறி மிளகாய்

இலங்கையில் எல்லா காலநிலை வலயங்களிலும் இதனைச் சிறப்பாகப் பயிரிடலாம். கடல் மட்டத்திலிருந்து 1,500 மீற்றர் வரையுள்ள பிரதேசத்தில் வருடம் முழுவதும் செய்கை பண்ணலாம். சிறுபோகத்தில் செய்கை பண்ணும் போது மேலதிகமான நீர்ப்பாசனம் வழங்க வேண்டும். கறி மிளகாயிற்கு நீர் நன்கு வடிந்து செல்லக் கூடிய, ஆழமான இருவாட்டி மண் அவசியமானதாகும். போதியளவான சேதனப் பசளைகளை இடுவதன் மூலம் மணல் போன்ற மண்கொண்ட தோட்டங்களிலும் சிறப்பான விளைச்சலைப் பெறலாம். மண்ணின் பீ.எச். (PH)5.5 - 6.8 வரை இருப்பது அவசியமாகும்.

**சிபாரிசு செய்யப்பட்ட வர்க்கங்கள்**
ஹங்கேரியன் யெலோ வெக்ஸ் (HYW)
சீ. ஏ. 8
லங்கா யெலோ வெக்ஸ்

**தேவையான விதை**
சீ. ஏ. 8 - ஹெக்டெயரொன்றிற்கு 1,000 கிலோ
HYW ஹெக்டெயரொன்றிற்கு 1,750 கிலோ

**நாற்றுக்களை நடவேண்டிய பருவம்**
காலபோகம் - நவம்பர் - டிசெம்பர்
சிறுபோகம் - ஏப்ரல் - மே



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

# கோட்டாபயவை ஜனாதிபதியாக்க உழைத்தமை தவறெனில் மன்னிப்புக் கேட்பதற்கு நான் தயார்

## ‘மொட்டு’க் கட்சிக்கு விமல் பதிலடி



கொழும்பு, ஜன. 09

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்ட பின்னர் நுகேகொடாவில் தொடங்கிய ‘மஹிந்த அலை’ அரசியல் பயணத்தின் முன்னோடிகளில் ஒருவராக நான் இருந்தமையால், அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன். அதேவேளை, கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க நான் உழைத்தமை தவறு என்றால் தேசத்திடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ நீக்கப்பட்டு, அந்தப் பதவிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என விமல் வீரவன்ஸ, கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தமை தொடர்பில் அவர் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் நேற்று கேட்டுக்கொண்டார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் நீர் கொழும்பில் இன்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின் ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.



# ‘மொட்டு’ அரசிலிருந்து விமலை உடனே வெளியேற்ற வேண்டும்!

## இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வலியுறுத்து

கொழும்பு, ஜன. 09

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீர வன்ஸவை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து உடனடியாக வெளி யேற்ற வேண்டும்.

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைத்துவம் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு விமல் வீரவன்ஸவுக்கு எவ்வித அருகதையும் கிடையாது. அவர் அவரின் கட்சி விவகாரத்தைப் பார்த்துக் கொள்ளட்டும். எமது பிரச்சினைகளை நாம் பார்க்கின்றோம்.

அரசில் இருந்தால் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். அதைவிடுத்து வீண் பிரசாரங்களைச் செய்வதை ஏற்க முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால் அரசில் இருந்து வெளியேறி, எதிரணியில் அமர்ந்து அவர் அதனை செய்யட்டும். விமல் வீரவன்ஸ என்ற நபரை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் - என்றார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அப்பதவி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்



யாழ். கந்தரோடையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும், முல்லைத்தீவை வதிவிடமாகவும், கனடா Milton ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட

## டாக்டர் குணரட்ணம் தம்பிப்பிள்ளை

முல்லைநகர் Clinic

யாழ். கந்தரோடையைப் பூர்வீகமாகவும், பிறப்பிடமாகவும், முல்லைத்தீவை வதிவிடமாகவும், கனடா Milton ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட குணரட்ணம் தம்பிப்பிள்ளை அவர்கள் 05- 02 - 2021 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான அரசக்கோன் ஜெருமையா நாகலஷ்மி தம்பதிகளின் மருமகனும், ஜெயேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், ராஜரட்ணம் மற்றும் சோமசுந்தரம், ஈஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சந்திரவதனி(கனடா), றூபி(ஐக்கிய அமெரிக்கா), அனுஷா (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலேந்திரா, அருள்சாகரன் மற்றும் சுதந்திரன்(பிரித்தானியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சிசிலியா, ஞானமலர், தனலட்சுமி மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான சம்மந்தர், கனகேஸ்வரி, கேதீஸ்வரன், மங்களவல்லி மற்றும் ராணி, நவநாயகம், நாகேஸ்வரி, ஜெயராஜா, Dr. உமாகாந்தன், பத்மினி ஆகியோரின் அன்பு சகலரும்,

காலஞ்சென்ற பிருந்தன் மற்றும் ஷாமிலி, ஷாலினி - ஜெயகாந்தன், சஞ்சயன் - அஞ்சனா, பிரஷாந், ஷங்கவி, ஜானவி ஆகியோரின் அன்புப் பேரனும், Niteesh, Nilesh, Smirthi, Shiyam, Shravaஜ ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10 - 02 - 2021) புதன்கிழமை Chapel Ridge Funeral Home இல் குடும்பத்தினர் முன்னிலையில் பார்வைக்கு வைக்கப்பட்டு, பின்னர் இறுதிக்கிரியை நடைபெற்ற பின்னர் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Canada, Ontario மாகாணத்தில் நிகழும் பொதுமுடக்க அமுல்படுத்தலின் காரணமாக நேரடி அஞ்சலி நிகழ்வுகள் குடும்ப உறவுகளுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. அன்னாரின் அஞ்சலி நிகழ்வுகள் இணையதளம் ஊடாக நேரடி ஒளிபரப்பு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு - +16474276147

தகவல்:- குடும்பத்தினர்

# ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் சத்தியாக்கிரகப் போராட்டம்!





வவுனியா பூந்தோட்டம் சிறிநகர் கிராம மக்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து சத்தியாக்கிரகப் போராட்டத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஈடுபட்டுள்ளனர்.

20 வருடங்களாகியும் தமது கிராமத்துக்கு காணி உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை, உட்கட்டுமான வசதிகள் செய்துதரப்படவில்லை. மைதானம் இன்மை, வீட்டுத்திட்டம் வழங்காமை போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பல வருடங்களாகியும் தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கவில்லை. இது தொடர்பாக ஜனாதிபதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுநர், அரச அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எமது விடயத்தில் எவரும் கரிசனை கொள்ளவில்லை என போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

உட்கட்டுமானம் சீரின்மையால் மழைக்காலங்களில் வீடுகளில் நீர்தேங்கி நிற்கிறது. காணி உரிமைப்பத்திரம் வழங்கினால் அதனை வங்கிகளில் வைத்து கடன்பெற்றாவது வீடுகளை கட்டிக்கொள்ள முடியும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தமது அடிப்படை கோரிக்கைகள் தொடர்பாக அதிகாரிகளால் பலமுறை வாக்குறுதிகள் வழங்கியும் எவரும் அதனை தீர்த்துவைக்கவில்லை என்றும் எனவே, தமது கோரிக்கைகளுக்குத் தீர்வு கிடைக்கும் வரை தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதன்போது, சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச செயலாளர் ந.கமலதாசன், பிரதேச சபை தவிசாளர் து.நடராஜசிங்கம் ஆகியோர் மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

முதற்கட்டமாக கிராமத்தில் உள்ள 95 பேருக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஏனைய காணிகள் குளத்தின் ஒதுக்கத்திற்குள் வருகின்றன என்றும் அதனை உரிய திணைக்களம் விடுவித்து தந்தால் அதற்கான உறுதிகளையும் வழங்க முடியும் என்று பிரதேச செயலாளர் தெரிவித்தமையுடன், ஏனைய பிரச்சினைகள் தொடர்பாக சாதகமாக ஆராய்வதாகத் தெரிவித்திருந்தார். அத்தோடு, கிராமத்தையும் பார்வையிட்டிருந்தார்.

இதேவேளை, போராட்டம் இடம்பெறும் பகுதிக்குச் சென்ற நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் கிராமத்தின் பின்பகுதியில் குளத்தின் நீரேந்து பகுதியில் 55 பேரது காணிகள் அமைந்துள்ளன. அதனை விடுவிப்பது தொடர்பாக எமது தலைமை அலுவலகமே தீர்மானிக்கமுடியும் என்றும் எனவே, நீங்கள் கோரிக்கைகளை வழங்கினால் மேலதிக நடவடிக்கைகளுக்காக அதனை எமது தலைமை அலுவலகத்துக்கு அனுப்பிவைப்பதாக தெரிவித்தனர்.

எனினும் குறித்த மக்களின் போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# யுவதிகளுக்கான 3 மாதகால தற்காப்புக்கலை பயிற்சிநெறி

எதிர்வரும் பங்குனி மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் முற்று முழுதாக மகளிர் பங்குகொள்ளும் 3 மாதகால தற்காப்புக்கலை (கராத்தே) இலவச பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் இரு நிலையங்களில் இடம்பெறும்.

வடமாகாணத்தை வதிவிடமாகக் கொண்ட அனைத்து யுவதிகளும் இதில் கலந்துகொள்ள முடியும். பயிற்சிநெறிக்கான இலவச சீருடை மற்றும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

பயிற்சிகள் அடுத்த மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகும்.

விண்ணப்பப்படிவங்களை வடமாகாண கல்வி அமைச்சின் இணையத்தளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்யவோ அன்றி நிகழ்நிலையில் (online) படிவத்தை பூர்த்தி செய்யவோ அல்லது எமது அலுவலக வரவேற்பு உத்தியோகத்தரிடம் நேரடியாக பெற்றுக்கொள்ளவோ முடியும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மகளிர் தற்காப்புக்கலை பயிற்சிநெறி – 2021' எனக்குறிப்பிட்டு தபால் மூலம் அல்லது நேரடியாக விண்ணப்பம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களை 'செயலாளர் கல்வி அமைச்சு, வட மாகாணம் செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

விண்ணப்பங்களை, விண்ணப்ப இறுதித்திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கடமை நேரத்தில் எமது அலுவலக வரவேற்பு உத்தியோகத்தரிடம் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு, இணையத்தள முகவரி: edumin.np.gov.lk, 021 222 2203, 077 736 0783 என்பவற்றினூடாக அறிந்துகொள்ளலாம்.

வடமாகாணத்தை வதிவிடமாகக் கொண்டிருத்தல் வேண்டும், 19 - 40 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்ப இறுதித்திகதி இந்த மாதம் 25 ஆம் திகதி மாலை 4 மணி (தபால் மூலமாகவோ, நேரடியாகவோ அனுப்பி வைக்கமுடியும்).

பயிற்சிநெறியின் நேரம், மற்றும் சீருடையின் அளவு போன்ற விடயங்கள் வார நாளொன்றில் இடம்பெறும் ஒன்றுகூடல் மூலம் தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தூக்கில் தொங்கிய நிலையில் ..........

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

கற்குழி பகுதியைச் சேர்ந்த சதுசியா (வயது 16) என்ற மாணவியே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் எழுதினார் என்று தெரிவிக்கப்படும் கடிதம் ஒன்றையும் வீட்டிலிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

## யாழில் இந்திய அரசினால் அமைக்கப்பட்ட .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகாரி பிரிகேடியர் எல்.எஸ்.பாலச்சந்திரவிடமும் படையினரிடம் அதனைக் கையளிக்குமாறு பணிப்புரைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் இந்திய அரசினால் இந்திய நாணயத்தில் 100 கோடி ரூபா (இலங்கைப் பணத்தில் சுமார் 250 கோடி ரூபா) செலவில் அமைக்கப்பட்ட கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கட்டடத்தைப் பராமரிப்பதற்கு சில துறைசார் தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், பொறியியலாளர்கள் உட்பட 60 வரையான பணியாளர்கள் தேவைப்படுவதோடு இந்த பணித் தொகுதிக்கு கட்டடத்தை அமைத்த இந்தியக் குழுவால் அதற்கான பயிற்சியும் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

இந்தக் கட்டடத்தைப் பராமரிப்பதற்கு யாழ்ப்பாணம் மாநகர சபை தயாராகும் காலம் வரை கொழும்பு தாமரைத் தடாகத்தை நிர்வகிக்கும் சிரேஷ்ட நிறைவேற்று அதிகாரி அதனைப் பொறுப்பேற்று கையாள்வார் எனத் தெரிவித்து தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.ரி.கொடிகாரவினால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

2021.01.26 ஆம் திகதிய கடிதம் மூலம் புத்தசாசன, சமய விவகார மற்றும் கலாச்சார அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தின் பிரதி பிரதமரின் செயலாளர், வடக்கு மாகாண ஆளுநர், மாநகர முதல்வர், மாவட்டச் செயலாளர், மாநகர ஆணையாளர் ஆகியோருக்கும் பிரதி அனுப்பப்பட்டுள்ளது.

அலரி மாளிகையில் பிரதமரின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது

இவ்வாறு புதிய ஆளணியை நியமித்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் ஏற்பாட்டிற்கான காரணங்களால் அதிக காலதாமதம் ஏற்படலாம் எனவும் –

அதுவரை கொழும்பு தாமரைத் தடாகத்தை நிர்வகிக்கும் படையினரிடம் அதனைக் கையளிக்க, அந்தப் படையினர் இந்தியக் குழுவினிடம் பயிற்சியை பெற்றுக்கொள்வார்கள் எனவும் –

மாநகர சபைக்கான நிரந்தர ஆளணி நியமிக்கும்போது அவர்களிற்கான பயிற்சியை அந்தப் படையினர் உரிய சமயத்தில் வழங்குவர் எனவும் – தெரிவிக்கப்பட்டது.

# வவுனியாவில் 7 வயது சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு!



வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட நவ்வி பகுதியில் பாடசாலை மாணவனின் சடலம் கிணற்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் கடந்த திங்கட்கிழமை மதியம் 2 மணியளவில் வீட்டில் இருந்து சக மாணவனின் வீட்டுக்குப் படிக்கச் சென்றுள்ளார்.

எனினும் நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரைக் காணவில்லை என ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, அந்தச் சிறுவனின் புத்தகப்பை சிறுவனின் சக மாணவனின் வீட்டிற்கு அருகில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து ஓமந்தை பொலிஸார் மோப்ப நாய் சகிதம் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் மேற்படி சிறுவன் அந்த வீட்டில் காணப்பட்ட கிணற்றில் இருந்து சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நவ்வி ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வரும் 7 வயதுடைய ப.அபிசாந் என்பவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணையினை வவுனியா ஓமந்தை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

கல்யாண மாலை நிறுவனத்தின்
சக நிறுவனமான இணைந்த சேவை
இந்துசமய வளர்ச்சி சேவை, உள்நாட்டு சேவை.

* ஆலயங்கள், இராஜகோபுரங்கள் வில்மண்டப வளைவுகள் இந்திய கட்டட கலை நிபுண சிற்பாச்சாரிகள் மூலமாக அமைத்துத் தரப்படும்.
* ஆலயங்கள், சுற்று பரிவாரங்கள், கருங்கல் மூலமாக (மிசின் வெட்டு) அமைத்து தரப்படும்.
* ஆலய அமைவிட நிலையங்கள் அளவுப் பிரமாணப்படி எடுத்தும் அடிக்கல் நாட்டும் சுபநேரமும் கணித்துத் தரப்படும்.
* ஆலயங்களுக்கு வர்ணம் பூசுதல் (பெயின்றிங்) வேலைகளும் செய்து தரப்படும்.
* ஆலயங்களில் கும்பாபிஷேகம் மற்றும் சங்காபிஷேகம் நடாத்தி வைக்க பிராமணக்குருமார் மற்றும் சைவ குருமார்கள் ஒழுங்கு செய்துதரப்படும்.
* கும்பாபிஷேகத்தின்போது ஆலயங்களுக்கு, இந்திய சிற்பாச்சாரிகள் மூலமாக விக்கிரகங்கள் (மிசின்வெட்டு) மூலமாக செய்து தரப்படும்.

குஞ்சர் கடையடி அருகாமை,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையானன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

தொடர்புகளுக்கு -
077 3434 415
077 8578 528

காலைக்கதிர் Kalaikkathir

# குடாநாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதாரச் சிக்கல் அதிகம் உள்ளன!

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற கடல் கடந்த தீவுகளான அனலைதீவு, நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு போன்ற தீவுகளில் சுகாதாரப் பிரச்சினைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. அதற்கான தீர்வுகள் பல வருடங்களாகியும் தீர்க்கப்படாத ஒன்றாகவே காணப்படுகின்றது. இதற்கு அரசாங்கம் விரைவில் ஒரு தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். என்று தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

நேற்று நாடாளுமன்ற அமர்வு இடம் பெற்றது. குறித்த அமர் வில் உரையாற்றும்போதே சி.சிறிதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்:-

அனலைதீவில் வைத்தியர், பல் வைத்தியர், தாதியர் போன்ற பதவி நிலைகளுக்குரியவர்கள் பல ஆண்டுகளாக பணிக்கு அமர்த்தப்படாமல் இருக்கின்றனர். நெடுந்தீவு, எழுவை தீவு, நயினாதீவு போன்ற பிரதேசங்களிலும் இதுவே நிலைமை. அங்கு பயிற்சிக்காக வைத்தியர்கள் அனுப்பப்படுகின்றார்களே தவிர நிரந்தரமாக எவரும் பணியமர்த்தப்படவில்லை. அங்கு யாரும் செல்வதுமில்லை. அவ்வாறு பணியமர்த்தப்படுவதற்கான முயற்சிகளிலும் அரசாங்கம் ஈடுபடுவதில்லை. வைத்தியர்களின் தேவை இந்தக் கடல்கடந்த தீவுகளுக்கு மிக அத்தியாவசியமானது.

அங்கு பணியாற்ற வைத்தியர்கள், தாதியர்கள் அமர்த்தப்பட்டால் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்கின்றனர். அவ்வாறு செல்பவர்கள் நான்கு ஐந்து பஸ்களில் மாற்றலாகி அதன் பின் கடல் வழிப்பயணத்தின் மூலம்தான் செல்ல முடிகின்றது. மேலும் அவர்கள் அங்கு இருந்து பணியாற்றினால் அவர்களுடைய சம்பளம் போதாமல் உள்ளது. ஆகவே அவர்களுக்கு ஏதேனும் ஊக்குவிப்புக் கொடுப்பனவினை வழங்க முடியுமா..? - என்று கேள்வி எழுப்பியிருந்தார்.

அத்துடன் மாகாண சபைகளுக்கு கீழே குறித்த வைத்தியசாலைகள் இருந்தாலும் வைத்தியர்களை நியமிப்பதென்பது மத்திய அரசாங்கமே. அப்படியென்றால் முழுமையான அதிகாரத்திதை மாகாணசபைக்கு வழங்கியிருந்தால் மேலதிக கொடுப்பனவுகளை வழங்கமுடியும். மாறாக மத்திய அரசு முழுமையான அதிகாரத்தினை வைத்திருப்பதால் அரசாங்கம் அது தொடர்பில் சரியான பதிலை வழங்கவேண்டும். எனவும் தெரிவித்திருந்தார்.

# பல்கலை மாணவருக்குப் புதிய திட்டம் ஆரம்பித்து வைத்தார் கோட்டாபய!

பல்கலைக்கழகங்களில் புதிதாக அனுமதி பெற்ற மாணவர்களுக்கு சலுகை அடிப்படையில் மடிக்கணனிகளை வழுங்கும் திட்டத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்துள்ளார்.

தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் முழுமையான கல்வி முறையையும் டிஜிட்டல்மயமாக்குவதற்கான செழிப்பு பார்வை என்ற நோக்கின் அடிப்படையில் மக்கள் வங்கியின் உதவியுடன் இந்த திட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு செயற்படுத்தியுள்ளது. இந்த திட்டத்திற்காக மக்கள் வங்கி 300 கோடி ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

இணைய இணைப்பு, மென்பொருள் தொகுப்பு மற்றும் 4 ஆண்டுகால உத்தரவாதத்துடன் மடிக் கணனிகளை வழுங்குகின்றது. ஒரு கணனியின் மதிப்பு 80,000 ரூபா. வேலை கிடைத்த பின்னர் 06 ஆண்டுகளில் மொத்த தொகையை திருப்பிச் செலுத்தக்கூடிய வகையில் கடன்கள் வழுங்கப்படுகின்றன.

மாணவர்கள் தமது கல்வி கற்கும் காலத்தில் மாதாந்தம் 500 ரூபா வீதம் செலுத்தலாம்.

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் 2021 ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்ற ஆறு புதிய மாணவர்களுக்கு இந்த திட்டத்தை குறிக்கும் கடிதங்களை ஜனாதிபதி வழுங்கினார்.

# 70 ஆயிரத்தை கடந்தது கொரோனா தொற்றாளர்!

நாட்டில் உறுதி செய்யப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்தையும் கடந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை மாத்திரம் 887 புதிய கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், இலங்கையில் உறுதி செய்யப்பட்ட மொத்த கொரோனா நோயாளர்களது எண்ணிக்கை 70 ஆயிரத்து 235 ஆக உயர்வடைந்துள்ளது.

திங்கட்கிழமை அடையாளம் காணப்பட்ட கொரோனா நோயாளர்களில் 859 பேர் மினுவாங்கொட - பேலியகொட கொவிட் கொத்தணிப் பரவலுடன் தொடர்பு கொண்டவர்கள் ஆவர். ஏனைய 19 பேர் சிறைச்சாலை கொத்தணிப் பரவலுடன் தொடர்பு கொண்டவர்கள். ஏனைய ஒன்பது பேர் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்தவர்கள் ஆவர்.

இதனால் மினுவாங்கொட - பேலியகொட கொவிட் கொத்தணிப் பரவலில் சிக்கிய கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 66 ஆயிரத்து 225 ஆகப் பதிவாகியுள்ளது.

இதனிடையே கடந்த திங்கட்கிழமை கொரோனா தொற்றுக்குள்ளான 740 பேர் பூரண குணமடைந்து வைத்தியசாலைகளை விட்டு வெளியேறியுள்ளனர். அதனால் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கையும் 64 ஆயிரத்து 141 ஆகப் பதிவாகியுள்ளது.

தற்போது நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலை மற்றும் சிகிச்சை நிலையங்களில் 5 ஆயிரத்து 729 பேர் சிகிச்சை பெற்று வருகின்றமையுடன், சந்தேகத்தில் 711 பேர் வைத்தியக் கண்காணிப்பிலும் உள்ளனர்.

இதேவேளை, கொவிட் தொற்றால் மேலும் ஒன்பது பேர் திங்கட்கிழமை உயிரிழந்திருக்கின்றனர் என உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனால் நாட்டில் கொரோனா தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 365 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4SIGHT OPTICALS
08B 1ம் மாடி
கார்கில்ஸ் சதுக்கம்
யாழ்ப்பாணம்.
அனைத்து விதமான
மூக்குக் கண்ணாடிகளையும்
பெற்றுக்கொள்ளலாம்.
021 222 3038 / 077 700 2411

CNR world wide Express
International Courier & Cargo Service.
Courier & Cargo
உள்நாடு, வெளிநாடுகளுக்கான அதிவேக, மிதவேக தபால், பொதிகள் பரிமாற்று சேவை.
அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்.
கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்கு பரிமாற்ற சேவை.
வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி.
அனுப்பும் பொதிகளை இணையத் தளத்தில் கண்காணிக்கும் வசதி.



இல. 401, மணிக்கூட்டு கோபுரவீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
Tel - 021 567 4145
Mob - 077 2931062

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1982.03.30 | பிறந்த திகதி - 1982.11.17 |
| மதம் - இந்து K | மதம் - குருகுலம் இந்து K |
| நட்சத்திரம் - ரோகிணி | நட்சத்திரம் - கேட்டை |
| செவ் - ----- | செவ் - 7இல் |
| பாவம் - 7 3/4 | பாவம் - 63 |
| கல்வி - A/L | கல்வி - Bsc பட்டதாரி |
| தொழில் - ஆஸ்திரேலியா PR இல்லை | தொழில் - வங்கி அதிகாரி |
| எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியாவில் PR உள்ள மணமகள் தேவை. | எதிர்பார்ப்பு - பட்டதாரியும் அரச உத்தியோகமும். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.
குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை
077 3434 415
077 8578 528

Anna EXPRESS Courier Services
அண்ணா
விரைவுப் பொதிகள் சேவை
077 8889388
075 3305500
070 3305500
3-6 நாட்கள்
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 10.02.2021 இல் வெளியிடப்பெற்றது.

# இனப்படுகொலை என்ற வார்த்தையால் நாடாளுமன்றத்தில் நேற்று கடும் சர்ச்சை

## — கஜேந்திரகுமாருடன் ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்குவாதம்



இலங்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைக்கு நியாயம் கோரியும், இன்றும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் இனப்படுகொலையைத் தடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான தமிழர் எழுர்ச்சிப் பேரணி இடம்பெற்றது எனத்தமிழ்த்தேசியமக்கள்முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சபையில் தெரிவித்ததை அடுத்து ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவருடன் வாக்குவாதப்பட்டனர்.

'இன்றும் இனப்படுகொலை' என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது எனக்கூறி ஆளும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாதிட்ட போதிலும் தன்னால் இந்த வார்த்தையை மீளப்பெற முடியாது எனக் கஜேந்திரகுமார் எம்.பி. பதிலடி கொடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று தொழில் அமைச்சின் கீழுள்ள ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே கஜேந்திரகுமார் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்,

பிரதான பத்து கோரிக்கைகளை முன்வைத்துவடக்கு, கிழக்கு சிவில் அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த பேரணியானது பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் குறித்த பத்து காரணங்கள் மாத்திரமே எமது பிரதான கோரிக்கைகள் அல்ல. மேலும் நான்கு உபகோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இதில் வடக்கு – கிழக்கு பூமி தமிழ் பேசும் மக்களின் தாயகமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்கான தனித்தாயகமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

அதேபோல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறையின் கீழ் இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றமையையும், இன்னும் அது தொடர்கின்றது என்பதையும் விசாரிக்கப்பட வேண்டும். இந்த உண்மைகள் மறைக்கப்பட முடியாது – என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா எம்.பி., இனப்படுகொலை இடம் பெற்றது எனவும், இன்றும் இடம்பெற்று வருகின்றது எனவும் கஜேந்திரகுமார் எம்.பி. கூறுகின்றார். அவர் எதனைக் கருத்தில்கொண்டு இவ்வாறு கூறுகின்றார் என்று எமக்குத் தெரிவில்லை – என்றார்.

இதற்குப் பதில் தெரிவித்த கஜேந்திரகுமார் எம்.பி., இனப்படுகொலை என்பது வெறுமனே இனத்தைக் கொள்வது மட்டுமல்ல, ஒரு சமூகத்தை இலக்கு வைத்து அவர்களின் அடையாளத்தை அழிப்பதும் இனப்படுகொலை என்றே கருதப்படும்.

2009ஆம் ஆண்டு வரையில் உயிர்களை இலக்குவைத்து நடத்தப்பட்டதைப் போலவே இப்போதும் திட்டமிட்டு வடக்கு, கிழக்கு தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காலனித்துவ கொள்கையில் நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தொல்பொருல் திணைக்களம் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து நிலங்களை ஆக்கிரமிக்கின்றது. இவ்வாறு பல்வேறு வேலைத்திட்டங்கள் தமிழர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படுவதும் இனப்படுகொலையாகும் – என்றார்.

மீண்டும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஹர் டி சில்வா எம்.பி., ஆனால், எமக்குத் தெரிந்த வரையில் இனப்படுகொலை என்பது அதிகளவான மக்களைக் கொன்று குவிப்பதாகும் – என்றார்.

இதன்போது ஆளும் தரப்பில் இருந்து ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால், இனப்படுகொலை என்பது எமக்குத் தெரிந்த வரையில் திட்டமிட்ட கொலையாகும். அதிகளவான மக்களை அல்லது ஒரு இனக்குழுவைக் கொல்வது இனப்படுகொலை என அர்த்தப்படும். ஆனால், நீங்கள் கூறும் காரணிகளுக்கு இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது முற்றிலும் தவறான ஒன்றாகும். எனவே, அதனைத் திருத்திக்கொள்ளுங்கள் – என்றார்.

உடனே கஜேந்திரகுமார் எம்.பி., இனப்படுகொலைக்கான வரைவிலக்கணம் பற்றி நான் இங்கு பேச வரவில்லை. எந்த விதத்திலும் இதற்கான வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியும். ரோமானிய பிரகடனத்தின் ஐந்தாம் உறுப்புரையை வாசியுங்கள் – என்றார்.

இதன்போது ஹர்ஷ டி சில்வா எம்.பி., இனப்படுகொலை என்ற வார்த்தையை நீங்கள் சரளமான விடயங்களுக்குப் பயன்படுத்த முடியாது – என்றார்.

இதற்குப் பதிலலித்த கஜேந்திரகுமார் எம்.பி., நான் ஒரு தகுதியான சட்டத்தரணி. எனக்கு எவ்வாறு வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது தெரியும். இங்கு இனப்படுகொலை நடந்தது. அதற்கான நியாயத்தைக் கேட்கின்றோம். இதற்கான சாட்சியில் நானும் ஒருவன். அதேபோல் இன்றும் எமது அடையாளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றது. அதனையே நான் அவ்வாறு கூறுகின்றேன் – என்றார்.

உடனே இராஜாங்க அமைச்சர் நிவாட் கப்ரால், நீங்கள் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்த முடியாது. நீங்கள் கூறும் காரணிகளுக்குப் பொருத்தமான வார்த்தை இதுவல்ல – என்றார்.

அதன்பின்னர் கஜேந்திரகுமார் எம்.பி., நான் சட்ட முறைமைக்கு அமையவே பேசுகின்றேன். நீங்கள் ரோமானிய பிரகடனத்தைப் பாருங்கள். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதது எனக் கூறும் குற்றச்சாட்டை ஏன் உங்களால் விசாரிக்க முடியாதுள்ளது. முதலில் அதனைச் செய்யுங்கள் – என்றார்.

ஹர்ஷ டி சில்வா எம்.பி. பதிலளிக்கும் போது, நீங்கள் இனப்படுகொலை என்ற வார்த்தையைப் பயன்படுத்த வேண்டாம். அது பாரதூரமான வார்த்தை – என்றார்.

அதற்குப் பதில் வழங்கிய கஜேந்திரகுமார் எம்.பி.:– இனப்படுகொலை என்ற வார்த்தையை நான் மிகவும் பொறுப்புடன் இந்த இடத்தில பயன்படுத்துகின்றேன். உங்களிடம் நான் கேட்பது ஒன்றுதான், எதிர்க்கட்சித் தலைவரும் ஆளும் கட்சித் தலைவரும் வாருங்கள். நாடாளுமன்றத்தில் விவாதம் ஒன்றை நடத்துவோம். இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதா? இல்லையா? என விவாதிக்கலாம். அதற்கு ஏன் அஞ்சுகிறீர்கள்?' என்று கேள்வி எழுப்பினார்.

உடனே இராஜாங்க அமைச்சர் நிவாட் கப்ரால். இன்றைய விவாதத்துக்கும் சற்றும் பொருத்தமில்லாத காரணிகளைப் பேச வேண்டாம் – என்றார்.

கஜேந்திரகுமார் எம்.பி. பதிலளிக்கும் போது, நீங்கள் எனது உரையைத் தடுக்க வேண்டாம் – என்றார்.

இதன்போது சபையை வழிநடத்திய அஜித் ராஜபக்ச எம்.பி., கஜேந்திரகுமார் எம்.பியைப் பார்த்து, நீங்கள் விடயத்துக்குப் பொருத்தமாகப் பேசுங்கள். அப்போது இந்தக் குழப்பங்கள் எதுவும் எழாது. நீங்கள் பொருத்தமில்லாத விடயங்களைப் பேசுவதால் உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் குழப்பங்கள் ஏற்படுகின்றன. எனவே, உங்களுக்காக அதிக நேரத்தை வழங்க முடியாது – என்றார்.

இதன்போது ஒழுங்குப்பிரச்சினை எழுப்பிய சாந்த பண்டார எம்.பி, கஜேந்திர குமார் எம்.பியின் இனப்படுகொலை என்ற வார்த்தைப் பிரயோகம் பொருத்தமானதல்ல. இலங்கையில் அவ்வாறன ஒரு இனப்படுகொலை இடம்பெறவில்லை. இனியும் இடம்பெறாது. எனவே, அவரது வார்த்தையை ஹன்சாட்டில் இருந்து நீக்க வேண்டும் – என்றார்.

மீண்டும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய ஹர்ஷ டி சில்வா எம்.பி., நாடாளுமன்றத்தில் உரையாற்றும் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தாம் பேசும் வார்த்தைகள் என்ன என்பதைத் தெரிந்து பேச வேண்டும். ஒருவர் பேசியதை நீக்க வேண்டும் என்று இன்னொருவர் கூறமுடியாது. ஆனால், இவ்வாறான வார்த்தைகளைப் பயன்படுத்துவது சரியா? தவறா? என்பதை வார்த்தைகளைப் பயன்படுத்தும் உறுப்பினர் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே, அடுத்த தடவை நீங்கள் பேசும்போது அவதானமாகப் பேசுங்கள் – என்றார்.

இதையடுத்து ஆளும் கட்சியில் பலர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பியின் கருத்துடன் முரண்பட்டுக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தனர்.

## கொழும்பு மாவட்ட பாடசாலைகள் மீண்டும் 15 ஆம் திகதி ஆரம்பம்!

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் மீண்டும் திறக்கப்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடன் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 412 பாடசாலைகளும் திறக்கப்படவுள்ளன.

அந்தவகையில், திம்பிரிகசாய, ஹோமாகம, கெஸ்பேவா, தெஹிவளை, மொரட்டுவ, கொலன்னாவ மற்றும் சீதாவாக்கை பகுதிகளில் உள்ள பாட சாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## வேதாத்தியான வகுப்புக்கள்

லோக க்ஷேம சபா வேத சிவாகம குருகுலத்தின் வேதாத்தியான வகுப்புக்கள் மாசித் திங்கள் முதலாம் நாள் பூர்வ பக்ஷத் திதியையில் (13.02.2021) சனிக்கிழமை மாலை 7 மணி தொடக்கம் 8 மணி வரையும், ஒவ்வொரு நாள்களும் சிவாகமப் பிரயோக வகுப்புக்கள் (கிரந்த எழுத்துக் களுடன்) சனி, ஞாயிறு தினங்களில் மாலை 3 மணி தொடக்கம் 4 மணி வரையும், சமஸ்பிருத பாக்ஷா ஞானம் (தேவநாகரீ எழுத்துக்களுடன்) மாலை 4 மணி தொடக்கம் 5 மணி வரை அதே தினத் தில் தொடர்ந்து நடை பெறவுள்ளன.

மேற்குறிப்பிட்ட வகுப்புக்களில் கற்க விரும்பும் மாணவர்கள் 077 400 6797, 077 5487849, 077 8396114 எனும் தொலைபேசி இலக் கங்களுடன் தொடர்பு கொள்ளலாம். வகுப்புக்கள் லோட்டன் வீதி, வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய், யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

## 1,000 ரூபா சம்பளம் குறித்த வர்த்தமானி இரு வாரத்தில்!

### பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன உறுதி

*கொழும்பு,பெப்.10*

*பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 1,000 ரூபாவாக அதிகரிக்கும் திட்டம் இரண்டு வாரங்களுக் குள் வர்த்தமானி அறிவிப்பு மூலம் வெளியிடப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.*

*நேற்று (செவ்வாய்க்கிழமை) நாடாளுமன்றில் பேசிய பெருந் தோட்டத் துறை அமைச்சர் ரமேஷ் பத்திரன, ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படும் என்றும் பின்னர் இந்தத் திட்டம் சட்டமாக மாறும் என்றும் கூறினார்.*

*இருப்பினும் இறுதி முடிவு எடுக்கப்படும் முன்னர் பெருந்தோட்ட உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்களின் கவலை தொடர் பாகவும் அரசாங்கம் கவனத்தில் எடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.*



*அத்தோடு வர்த்தமானி அறிவித்தல் வெளியானதும் தொழிலாளர்களுக்கான அதிகரித்த ஊதியத்தை தோட்ட உரிமையாளர்கள் செலுத்த வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.*